


351. 'கடல் கண்டோம்!'

சதவலி, ஸுஷேணன், தாரன், கேஸரி, கவாக்ஷன், தூம்ரன், பனசன், நீலன், தரீமுகன், கஜன், ஜாம்பவான், துர்முகன், துமிந்தன், மயிந்தன், கஜ கோமுகன், குமுதன், பதுமுகன், இடபன், தீர்க்கபாதன், விந்தன், சரபன், நளன், கும்பன், சங்கன்—யார் இந்தப் பேர்வழிகள்? 'ஆஹா, எத்தனை புனை பெயர்களுக்கு வழி கிடைக்கிறது!' என்று எழுத்தாளர்கள் எண்ணி மகிழக் கூடும்.

வானர வீரர்கள்

அவர்களெல்லாம் பேனா வீரர்களல்ல, போர்வீரர்கள். சாதாரணப் படை வீரர்களல்ல, படைத் தலைவர்கள். சுக்கிரீவ மகாராஜாவின் படைத் தலைவர்கள்.

வானராதிபர்கள் தம் தம் சேனையுடன் திரண்டு வருகிறார்கள். ஒருங்கே திரட்டிய வானரப் படையை வானர ராஜா காட்ட, ராம லட்சுமணர் அந்தச் சேனைப் பரப்பைப் பார்வையிடப் போகிறார்கள். பார்த்து, 'சேனையா கண்டோம்?' என்று திகைக்கப் போகிறார்கள்.



சேனைகளுடன் வந்த வானராதிபர்களில் ஸுஷேணன் தாரைக்குத் தந்தை. எனவே வாலிக்கு மாமன். முதல் முதல் சதவலி என்ற சேனாதிபதியின் வரவு கூறி அடுத்தபடியாக வாலி மாமனின் வருகை கூறுவதால், இவனுக்கு வானர மகாராஜ்யத்திலுள்ள பெருமதிப்பும், புதிய மகாராஜாவுக்கு இவன் மீதுள்ள நம்பிக்கையும், இவனது ராஜ விசுவாசமும் நன்கு புலனாகும்.

வாலி மாமனுக்கு அடுத்தபடியாக அந்தஸ்து வகிப்பவன்தான் சுக்கிரீவனின் சொந்த மாமனான தாரனும். இவன் சுக்கிரீவனின் மனைவியான ருமைக்குத் தந்தை.

வாலி மாமன் வருண தேவனுடைய மகனும். சுக்கிரீவனுடைய மாமனோ தேவாசாரியனான பிரகஸ்பதியின் புத்திரனும். ஜாதிக் கலப்பு மட்டுமல்ல, இனக் கலப்பும் கூட!

சேனையோடு வந்த அனுமன்-தந்தையான கேஸரியின் வருகை கம்பீரமாக வருணிக்கப் படுகிறது.

மொய்ம்பு மால்வரை புரைநெடு
வானரம் மொய்ப்ப,
இம்பர் ஞாலத்தும் வானத்தும்
எழுதிய சீர்த்தி
நம்பனைத் தந்த கேசரி
கடலென நடந்தான்.

[மொய்ம்பு மால்வரை புரைநெடு வானரம் — பெரு மலைகள் போன்ற தோள்களையுடைய பெரிய வானரசேனை. மொய்ப்ப — மொய்த்துக் கொண்டு தன்னைத் தொடர்ந்து வர. இம்பர் ஞாலத்தும் — இந்த உலகத்திலும். வானத்தும் — வானுலகத்திலும். எழுதிய சீர்த்தி — சரித்திரப் பிரசித்தமாக எழுதி வைத்திருக்கும் கீர்த்தியுள்ள. நம்பன் — சிறந்தவன்; (இங்கே) அனுமன்.]

கவாக்ஷன் என்ற வானராதிபனின் கண்கள் பசுவின் கண்களைப் போல் இருக்கின்றனவாம். இவன் 'ஆன்பெயர்க் கண்ணன்' என்று குறிக்கப் பெறுகிறான் பார்த்தால் பசு; பாய்ந்தால் புலிதான்!

தூரன் வானரப் படைகளுடன் வரவில்லையாம். கரடிப்படைகளுடன் வந்த கரடித் தலைவன் இவன். ராமாயணத்தில் கரடி என்றதும் ஜாம்பவானின் ஞாபகம்தான் வரும். தூரன் ஜாம்பவானுக்கு உடன் பிறந்தவன்.

பனசன் இடி போலவும் நஞ்சு போலவும் கண்டவரை நடுங்கச் செய்கிறானும். இடிபோல் மருட்டி, நஞ்சுபோல் அழித்து விடுவான் என்பது குறிப்பு. நீல நிறமுள்ள வானராதிபன் நீலன். இவனை 'அக்கினி குமாரன்' என்பர்.

'தரீமுகன்' என்றால் 'குகைபோன்ற வாயை யுடையவன்' என்று பொருள். கஜன் என்ற வானரன் யானை போன்ற வடிவுள்ளவன். இவனுடைய படையும் மிகவும் பருத்திருக்கிறதாம். இவனுக்குப் பின் வருகிறான் பிரசித்தி பெற்ற ஜாம்பவான் என்ற கரடி ராஜா. இவன் வானர சேனையோடுதான் வருகிறானும்.



'துர்முகன்' என்ற துன்முகன் கொடிய வானர சேனையுடன் வருகிறான். அழகில்லாத முகம்தான். ஆனால் போரில் பகைவருக்கு அழகு வேண்டாமே, பயங்கரம் தானே வேண்டும்?

குமுதனுடைய சேனை பின் வருமாறு வருணிக்கப் படுகிறது:

கறங்கு போல்வன,
காற்றினும்
கூற்றினும் கடிய,
பிறங்கு தெண்டிரைக்
கடல்புடை
பெயர்ந்தெனப்
பெயர்வ!

[கறங்கு போல்வன — காற்றாடி போல் செல்வன. காற்றினும் கடிய — காற்றைக் காட்டிலும் வேக

முடையன. கூற்றினும் கடிய — யமனைப் பார்க்கிலும் கொடுமையுடையன. பிறங்கு — விளங்குகின்ற. தெள் திரைக் கடல் — தெளிவான அலைகளையுடைய கடல். புடை பெயர்ந்து என — இடம் விட்டுப் பெயர்ந்தாற் போல். பெயர்வன — பெயர்ந்து செல்வன.]

புழுதியைக் கிளப்பிக் கொண்டு விநதன், சரபன், தீர்க்கபாதன் ஆகியவர்கள் கருங் குரங்குகளின் சேனை சூழ வருகிறார்கள்.

பின்னே அனுமனும் சேனையோடு வருகிறான். தெய்வத் தச்சனாகிய விசுவகர்மாவின் மகனான நளனும் வானர வீரன் தான். வானர சேனையுடன் வருகிறான்.

சேனை காணும் ராமன்

வானர சேனாதிபதிகள் வலிய பெரிய சேனைக் கூட்டங்களுடன் வந்து சுக்கிரீவனை வணங்கி மலர் சொரிந்து 'வாழி வாழி' என்று வாழ்த்துகிறார்கள். சுக்கிரீவன் உடனே ராமனிடம் சென்று, 'உன் சேனைகள் வந்திருக்கின்றன. கண்டருள்வாய்' என்று வேண்டிக் கொள்கிறான்.



அப்போது ராமனுடைய மகிழ்ச்சியைத் தான் என்னென்பது? எவ்வளவு உத்ஸாகமாய் அந்தச் சேனைப் பரப்பைச் செவ்வையாகப் பார்க்க வேண்டுமென்று ஒரு மலைச் சிகரத்தில் ஏறுகிறான்!

ஐயனும் உவந்
(து) அகமென
முகமலர்ந்
தருளித்
தையலாள்வரக் கண்டன
னெனத் தளிர்ப்பான்,
எய்தினன் அங்கோர் நெடு
வரைச்
சிகரத்தின் இருக்கை;
வெய்யவன் மகன் பெயர்த்தும்
அச்
சேனையில் மீண்டான்.

[ஐயனும் — ராமனும். அகமென முகமலர்ந்தருளி — தன் மனம் போலவே முகமும் மலரப் பெற்றவனாய்; உள்ளும் புறமும் ஒருங்கே களிப்புற்றவனாய். தையலாள் — (இங்கே) சீதை. தளிர்ப்பான் — வாட்டம் நீங்கிப் புத்துயிர் பெற்றவனாய். எய்தினான் — அடைந்தான். அங்கு ஓர் நெடுவரைச் சிகரத்தின் இருக்கை — அங்கேயுள்ள ஒரு பெரிய மலையின் சிகர ஸ்தானத்தை. வெய்யவன் மகன் — சூரிய குமாரன்

என்று சொல்லப்பெறும் சுக்ரீவன். பெயர்த்தும் — மறுபடியும். அச்சேனையில் மீண்டான் — அச்சேனையிடம் திரும்பிச் சென்றான்.]

சுக்ரீவன் திரும்பிச் சேனையிடம் சென்று அதனை வடதிசை நின்று தென்திசை நோக்கிச் செல்லுமாறு கட்டளையிட்டு விட்டு, சேனைத் தலைவர்களை அழைத்துக் கொண்டு ராமனை அடைகிறான். அடைந்து அவர்களை அறிமுகப் படுத்துகிறான். அதாவது, அவர்கள் ராமனை வணங்க, ஒவ்வொருவர் வரலாற்றையும் தெரிவிக்கிறான்.

அப்பால் ராமலட்சுமணர் இருவரும் தங்கள் பார்வை எட்டியவரையில் கூர்ந்து பார்க்கிறார்கள். பார்த்தும் சேனையின் ஒரு பகுதியைத்தான் காண்கிறார்களாம். ராமன் இந்தச் சேனையைக் கண்ணினாலும் கருத்தினாலும் கல்வி யறிவினாலும் அளவிட்டுக் காண முயன்று, தம்பியை நோக்குகிறான். நோக்கிப் பின்வருமாறு பேசுகிறான் ராமன் :

அடல்கொண்(டு) ஓங்கிய
சேனைக்கு
நாமும்நம் அறிவால்
உடல்கண் டோம்;இனி முடிவுள
காணுமா(று) உளதோ ?
மடல்கொண்(டு) ஓங்கிய
அலங்கலாய் !
மண்ணிடை மாக்கள்
கடல்கண் டோம்என்பர் ;
யாவரே
முடிவுறக் கண்டார் ?

[அடல் கொண்டு ஓங்கிய — வலிமை கொண்டு ஓங்கிப் பரந்து செல்லுகிற. சேனைக்கு உடல் கண்டோம் — (இங்கே) உடலாகிய நடுப்பகுதியாம் ஒரு பகுதியைத்தான் கண்டோம். இனி முடிவுள காணுமாறு உளதோ—இனி இதன் கால் தலையாகிய முடிவுகளைக் காணும் வகை உண்டோ. மடல் — இதழ். அலங்கலாய்— மாலை யணிந்தவனே ; (இங்கே) லட்சுமணனே. மண்ணிடை மாக்கள் — இவ்வுலகத்தில் மனிதர்.]

'கடலைக் கண்டோம்' என்பவர் எல்லாரும் கடலின் ஒரு சிறு பகுதியை— அதன் மேல் தோற்றத்திலே ஒரு சிறு பகுதியை—மாத்திரம் கண்டவர்கள். அவ்வளவுதான் காண்பாரேயன்றி எவர் தாம் கடலை முற்றும் கண்டறிந்தவர்? 'அவ்வாறே நாமும் இந்தச் சேனா சமுத்திரத்தைக் காண்கிறோம் !' என்கிறான் ராமன் லட்சுமணனை நோக்கி.

பின்னும் பேசுவானாய், 'எங்கும் நிறைந்த இறைவன் திருமேனியை வரையறுத்துப் பேச முடியுமா ?' என்று கேட்கிறான்.

மறுபடியும் தம்பியை நோக்கி, 'பத்துத் திக்குகளையும், அளவற்ற அண்டங்களெங்கும் நிரம்பிய ஐம்பெரும் பூத பரிணாமங்களையும் கணக்கிட முடியுமா ?' என்று ஒரு கேள்வி போடுகிறான்.


அறிவுக்குத்தான் முடிவெல்லை கட்ட முடியுமா? அறிவாளர்களிடம் புதிது புதிதாக நுட்பமாய்க் காணப்படும் அறிவு - விகற்பங்களும் அலைமேல் அலையெறிந்து கடல் போலப் பரந்து கிடப்பன அல்லவா ?

அறிவுப் பெருங் கடல் கிடக்கட்டும். சமயங்கள் ஒன்றோடொன்று மாறுபடுகின்ற மாறுபாடுகளைத் தான் திட்டமாக வரையறுக்க முடியுமா ? கர்ண பரம்பரையும் எட்டிப் பார்க்க இயலாத பண்டைப் பழங்காலம் முதல் முடிவின்றித் தோன்றிக் கொண்டிருக்கும் சமய பேத வகைகளைச் சரியாகக் கணக்கிட்டு வைத்தவர் யார் ?

இப்படிக் கேட்கும் ராமன், 'இந்தச் சமய வாதங்களை "ஆம்" என்றும், "அல்ல" என்றும், "இல்லை" என்றும், வாக்குவல்லார் பேச்சுக்கு மேல் பேச்சாகப் பேசும் பேச்சுப் பிரளயத்தைத் தான் அணை போட்டுக் காட்ட முடியுமா ?' என்கிறான் :

பேசும் பேச்சினைச், சமயங்கள்
பிணக்குறும் பிணக்கை
வாச மாலையாய் ! யாவரே
முடி வெண்ண வல்லார் ?

[பிணக்குறும் பிணக்கை — மாறுபடுகின்ற மாறுபாட்டை.]



352. சுக்கிரீவாக்ஞையும், யாத்திராமார்க்கமும்

சீதையைத் தேடும்படி வானர வீரர்களைப் பல திசைகளிலும் அனுப்ப வேண்டுமென்று சுக்கிரீவன் சிந்தனை செய்ததும், முதன் முதல் அனுமனை நோக்கினான். நோக்கியதும், ‘உன் தந்தை வாயு பகவானல்லவா? அந்த வாயுவைப் போல் நீயும் உலகமெங்கும் புகுந்து வேகமாய் உலாவி வரக்கூடியவனல்லவா?’ என்று வாயாரப் புகழ்ந்து பேசினான்.

கண்டனமும் களிப்பும்

புகழ்ந்தவன் திடீரென்று, ‘அத்தகைய வல்லமையும் வேகமும் பெற்றிருந்தும் நீ உடனே சீதையை நாடிப் போய்ச் செய்தி தெரிந்து வராமல் வீணாகக் காலதாமதம் செய்கிறாயே!’ என்று இடித்துக் காட்டினான்.

கடைசியாக உத்ஸாகப் படுத்தினான். சீதா தேவி எங்கேயிருந்தாலும் சிறிதும் தாமதம் செய்யாமல் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்; இந்தப் பணியிலே அனுமனின் அதிசய வேகம் — வாயு வேக மனோ வேக மெல்லாம், — வெளிப்படவேண்டும்.

அனுமனிடம் தான் என்ன நம்பிக்கை சுக்கிரீவனுக்கு! அனுமனுக்குத் தன்னம்பிக்கை இப்படி இல்லையே!

‘பூலோகம் எங்கும் தேடுவாய். அவசியமானால் கீழே பாதாளத்திலும் இறங்கித் தேடுவாய்! மேலே சொர்க்கத்திலும் ஏறித் தேடி வருவாய்!’ என்று அனுமனை உத்ஸாகப் படுத்துகிறான் சுக்கிரீவன்:

ஏகி, ஏந்திழை
  தன்னை இருந்துழி,
நாகம் நாடுக;
  நானிலம் நாடுக;
போக பூமி
  பொருந்திட வல்லநின்
வேகம் ஈண்டு
  வெளிப்பட வேண்டுமால்!

[ஏகி — நீ போய். ஏந்திழை — ஆபரணம் தரித்த பெண்; (இங்கே) ஆபரணங்களை விலக்கி யிருக்கும் சீதை. இருந்துழி — இருந்த இடம் (காண). நாகம் — நாகர்கள் வசிக்கின்ற பாதாள லோகம். நாடுக — நாடக்கடவாய். நானிலம் — (மலை, காடு, நாடு, கடற்கரை என்ற) நால்வகை நிலங்களையுடைய பூமி. போக பூமி — ஸ்வர்க்க லோகம். பொருந்திட வல்ல — போய்த்

தேடவல்ல. ஈண்டு — இப்போது. ஆல் — அசை.]

அனுமனே முக்கிய தூதன்

சீதையைக் கவர்ந்து சென்ற அரக்கன் தென் திசை நோக்கிச் சென்றான் என்பதையும், தன் விசேஷ நம்பிக்கைக்குரிய அனுமனிடம் தெரிவிக்கிறான் சுக்ரீவன்.

சீதையின் ஆபரணங்களைச் சுக்ரீவன் ராமனிடம் கொண்டு வந்து காட்டிய போது ராவணன் கவர்ந்து சென்ற அந்தச் செய்தியை மட்டும்தான் நேரில் பார்த்தபடி தெரிவித்திருந்தான். அந்தப் பெண் சீதா தேவியா யிருக்கலாமென்ற ஊகத்தையும் வெளியிட்டிருந்தான்.

இப்போதோ அனுமனிடம் சொல்லுகிறான் :

வள்ளல் தேவியை
  வஞ்சித்து வெளவிய
கள்ள வாளரக் —
  கன்செலக் கண்டது,
தெள்ளி யோய் ! அது
  தென்திசை என்பதோர்
உள்ள மும்மெனக்(கு)
  உண்டென உன்னுவாய்.

[வள்ளல்தேவி — ராமனது மனைவியாகிய சீதை. வெளவிய — அபகரித்துச் சென்ற. கள்ள வாள் அரக்கன் — கள்ளத்தனமுள்ள கொடிய ராவணன். செல — செல்ல. கண்டது — கண்டதான அந்தத் திசை. தெள்ளியோய் — தெளிந்த அறிவுடைய அனுமனே. உள் ளம் — (இங்கே) உள்ளக் கருத்து. உன்னுவாய் — நீ கருதுவாயாக.]


ராவணன் தென் திசை நோக்கிச் சென்றதால் அவனுடைய ராஜதானியாகிய இலங்கைமா நகரும் தென் திசையில் இருக்க வேண்டு மென்று ஊகிக்கிறான் சுக்ரீவன். எனவே அந்த ராஜதானியைக் கண்டுபிடித்து அங்கே தேடித்துருவிப் பார்க்க வேண்டியது மிகவும் அவசியமாக இருப்பதால், தென் திசையில் அனுமன் போக வேண்டியது அவசியமாகிறது. இவனுக்கு உதவியாக அங்கதன் ஜாம்பவான் முதலானோரும் புறப்பட வேண்டு மென்று தீர்மானிக்கிறான் வானர மகா ராஜா.

அனுமனை நோக்கிச் சுக்ரீவன், 'நீ அங்கதன் ஜாம்பவான் முதலியோர் கூட வர, இரண்டு வெள்ளம் வானர சேனையுடன் தென் திசைக்குச் செல்வாய்' என்று கட்டளை யிடுகிறான் :

தாரை மைந்தனும்
  சாம்பனும் தாம்முதல்
வீரர் யாவரும்
  மேம்படு மேன்மையார்
சேர்க நின்னொடும் ;
  திண்திறல் - சேனைகள்
பேர்க, வெள்ளம்
  இரண்டொடும் பெற்றியால்.

[தாரை மைந்தன் — அங்கதன். சாம்பன் — ஜாம்பவான். முதல் வீரர் யாவரும் — முதலாகிய வீரர் பலரும் ; அங்கதனும் ஜாம்பவானும் அவர்களைச் சேர்ந்தவர்களும். மேம்படும் மேன்மையார் — மிக்க மேன்மையுள்ளவர்கள். சேர்க நின்னொடும்—உன்னுடன் சேர்ந்து புறப்படட்டும். திண்திறல் சேனைகள் — மிக்கதிறமையுள்ள சேனைகள். பேர்க





— புறப்படட்டும், உங்களுக்குத் துணை யாக. பெற்றியால் — பெருமையுடன்.]

அனுமனுக்குத் துணையாக அங்கதன் முதலானவர்கள் புறப்பட வேண்டுமென்று சுக்கிரீவன் சொன்னபோதிலும், அங்கதன் தலைமையில் அனுமன் செல்ல வேண்டுமென்பது குறிப்பு. மகாராஜாவாகக் கிஷ்கிந்தையில் சுக்கிரீவன் முடி சூட்டப் பெற்றபோது அங்கதனே இளவரசனானான் என்பதை நாம் மறந்துவிடலாகாது. எனினும், அனுமனையே முக்கிய தூதனாகச் சுக்கிரீவன் மதிக்கிறான் என்பதையும் மறக்க வேண்டாம்.

இப்படித் தென் திசைக்குச் செல்லுமாறு அதி முக்கியமான வீரர்களை

ஏவிய பின் மற்றை மூன்று திசைகளி லும் தேடி வரும்படி மற்றைப் படைத் தலைவர்களுக்குக் கட்டளை யிடுகிறான். இரண்டிரண்டு வெள்ளம் சேனையோடு தேடிவருமாறு உத்தரவு.

சுக்கிரீவாக்ஞை

சுக்கிரீவனுடைய கட்டளைகளை 'சுக்கிரீவாக்ஞை' என்று சொல்வதுண்டு. 'மறக்கவோ, மறக்கவோ, அலட்சியம் செய்யவோ முடியாது; கடுமையான தண்டனை விதிக்கப்படும்' என்பது 'சுக்கிரீவாக்ஞை'யில் பொதிந்து கிடக்கும் உட்பொருள்.

இத்தகைய 'சுக்கிரீவாக்ஞை' வெளிப்படும் தோரணையைத்தான் பாருங்கள் இந்தக் கவியிலே:

'வெற்றி வானர
 வெள்ளம் இரண்டொடும்
சுற்றி ஓடித்
 துருவி, ஒருமதி
முற்றுறுதமுன்,
 முற்றுதிர் இவ்விடை,
கொற்ற வாகையி—
 னீர்!' எனக் கூறினான்.

[வெற்றி வானர வெள்ளம் — வெற்றி தவிர வேறொன்றும் அறியாத வானரப் பெருங் கூட்டம். துருவி—(மூலை முடுக்கெல்லாம்) தேடித் திரிந்து. மதி — (இங்கே) மாதம். முற்றுறுத முன் — முடிவதற்குள்ளே. முற்றுதிர் இவ் இடை — இந்த இடத்திற்குத் திரும்பி வந்து சேருங்கள். கொற்ற வாகையினீர் — வெற்றிக்குரிய வாகைமாலையை அணிதற்குரிய வீரர்களே.]

மலைகளிலும் தேடுங்கள்

சுக்கிரீவாக்ஞை இது. ராவணனுடைய ஆக்ஞையோ, எல்லாத் திசைகளிலும் சுக்கிரீவாக்ஞையைக் காட்டிலும் மேலான அதிகார தோரணையுடன் செல்லக் கூடியது. இதனால் தான், எந்தத் திசையிலும் சீதையை ராவணன் சிறை வைத்திருக்கக் கூடுமென்று நினைக்கிறான் சுக்கிரீவன். இப்படி நினைத்துத்தான் தென் திசை உள்ளிட்ட நாலு திசைகளிலும் தூதர்களை ஏவுகிறான்.

தென் திசை முக்கியமானதால் அங்கே செல்லும் வானரர்களை நோக்கிச் சீதையைத் தேடவேண்டிய ஹேமகூடம் முதலான இடங்களைக் குறிப்பிடுகிறான்:

வாம மேகலை
 வானவர் மங்கையர்
காம ஊசல் —
 களி இசைக் கள்ளினால்
தூம மேனி
 அசுணம் துயில்வுறும்
ஏம கூடம்
 எனுமலை எய்துவிர்.

[வாம மேகலை — அழகிய மேகலாபரணம் அணிந்த. காம ஊசல் — பெருவிருப்பத்துடன் ஆடும் ஊஞ்சல். களி இசை — களிப்பினால் பாடுகின்ற கீதம். தூமமேனி அசுணம் — புகை போன்ற உடல் நிறத்தையுடைய அசுணம் என்ற ஒரு வகைப் பறவை அல்லது மிருகம். துயில்வுறும் — தூங்குவதற்கு இடமான.]

மகா விருட்சங்களுக்கிடையே காட்டுக் கொடிகளை ஊஞ்சல் — கயிறாகக் கொண்டு ஆடி விளையாடுகிறார்கள் தெய்வப் பெண்கள், இடையிலே மேகலாபரணம் மின்ன.

ஆடும்போதே பாடுகிறார்கள்; பாடிக் கொண்டே ஆடுகிறார்கள். காதற் பாடல்களை உருக்கமாய்ப் பாடுகிறார்கள். வெறி கொண்டு பாடி விசையாட்டம் ஆடுகிறார்கள்.

இந்த இசைப் பாடல்களைக் கேட்டுப் பறவைகள் முதலியனவும் கள்ளுண்டவர் போல் வெறிகொண்டு மயங்கி உறங்கத் தொடங்குகின்றனவாம்.

இந்த மலையை இவ்வளவு வசீகரமாக வருணித்துவிட்ட சுக்கிரீவன், அந்த அழகுகளைக் கண்டு இவர்களும் மயங்கிப் பொழுது போக்கலாகாது என்று எச்சரிப்பவன் போல், 'விரைவாக ஹேமகூடத்தைவிட்டு நீங்குங்கள்' என்கிறான்.



353. திருப்பதியிலும் திருநெல்வேலியிலும் அபாயம்!


விஜேந்த யாத்ரா மார்க்கம்

ஆயிரம் கொடுமுடிகளோடு கூடிய விந்தியமலை, 'தோள்கள் ஆயிரத்தாய்! முடிகள் ஆயிரத்தாய்!' என்று பெரியார் வருணிக்கும் பெருவடிவு கொண்ட திருமாலின் விசுவரூபம் போலக் கண்டவர் தொழும்படி விளங்குகின்றதாம்.

பெருவளமுள்ள நர்மதை யாற்றங் கரையில் தேவர்களும் வந்து நீராடுகிறார்களாம். இருட்டை இருந்த இடம் தெரியாமல் துரத்துவதற்கு அங்குள்ள இரத்தினங்களே போதுமாம். சூரியன் சந்திரன் அக்கினி என்ற முச்சுடரும் மங்கைதான்.

பொன்மயமான சிகரங்களோடு கூடிய ஹேமகூடத்திலோ தேவமாதர்கள் தேவ கானம் செய்த வண்ணம் ஊஞ்சலாடுகிறார்கள்.

விதர்ப்ப நாட்டிலோ வேலியே சந்தன மரங்களும் அகில் மரங்களும் தான். அந்த வாசனையை அனுபவித்துக் கொண்டே இருந்தால் போதும் என்று தோன்றுமாம். கருமமே கண்ணாயினாரும்



அத்தகைய விதர்ப்ப நாட்டை விரைவில் கடந்து செல்ல இயலாமல் மெள்ள மெள்ளத்தான் வெளியேறுவார்களாம்.

தண்டக வனத்திலும், முண்டகத் துறை யென்று சொல்லப்படும் சோலையிலும், தரிசித்த மாத்திரத்தில் மனத்துயரம் மாற்றும் மகிமை வாய்ந்த பெரியோர்கள் நிரம்பி வசிக்கிறார்களாம். அந்தச் சோலையிலே காலம் இன்றிக் கனியும் கனிகளும் கிடைக்குமாம்.

ஓங்கி இனிமையாகத் தோன்றும் பாண்டு மலை சூரியனையும், 'நாம் என் இங்கே இளைப்பாறி விட்டு அப்பால் செல்லலாகாது?' என்று எண்ணும்படி வசீகரிக்குமாம்.

கோதாவிரியாறோ, முத்துக்களையும் இரத்தினங்களையும் பொன்னையும் மரத்தையும் கற்பாறைகளையும் உருட்டிப் புரட்டிக் கொண்டு வருகிறது!"

அப்பாலுள்ள சுவண நதியோ, தன் இரு கரைகளிலும் தர்ம மார்க்கம் போலவும் தயா மார்க்கம் போலவும் குளிர்ந்

நிலக்கும் பூஞ்சோலைக ளோடு காணப்படுகி றது !



சரி ; இந்தமாதிரியெல்லாம் யாத்திரா மார்க்கம் எங்கே கண்டதோ? எந்தப் புத்தகத்தில் அல்லது பூமி சாஸ்திரத் தில் அல்லது யாத்திரிகர்களின் ‘வழி காட்டி’ நூல்களில் காணப்படுகிறது?

சுவண நதியைத் தாண்டிச் சென்றால் சூரியகாந்த சந்திரகாந்த மலைகளையும் கண்டு கொள்வீர்களாம் — எங்கே, எப்படி ?

எல்லாம் சுக்கிரீவன் தெற்கே செல் லும் வானர வீரர்களுக்குத் தெரிவிக்கும் வழிதான்—கம்பனுடைய பூமி சாஸ்திர ஞானம்தான் !

ஒரு மலையுபதேசம்

அப்பால் அருந்ததி மலை யென்ப தொன்று சென்று அடைதற்கு அரிய தாக இருக்கிறதாம் :

‘அரன்அதிகன், உலகளந்த
அரிஅதிகன்’ என்றுரைக்கும்
அறிவிலோர்க்குப்
பரகதிசென்(று) அடைவரிய
பரிசேபோல், புகலரிய
பண்பிற்றுமால் !

[அரன் — சிவபெருமான். அதிகன் — மேலான கடவுள். உலகளந்த அரி அதிகன் — உலகங்களைத் தன் திருவடி களினால் அளந்துவிட்ட திருமாலே மேலான கடவுள். பரகதி சென்று அடைவு அரிய பரிசே போல்—நற்கதி சென்று அடைவது அருமையான தன் மையுடையதாவதுபோல். புகல் அரிய பண்பிற்று ஆம் — புகுதற்கு அரிய பண்பை உடையது.]

அரனையும் அரியையும் ஒரே கடவுளா கக் கருதாமல் ‘அவன் பெரியவன்,

இவன் பெரியவன்' என்று வாதாடும் மேதாவிகளை ராம பக்தனான சுக்கிரீவன் 'அறிவில்லாதவர்கள்' என்று சித்தாந்தம் செய்கிறான். அவர்களுக்குப் பரகதி அடைய எப்படி அரிதாயிருக்குமோ, அப்படி அருந்ததி மலையும் அடைதற்கு அரிதா யிருக்கிறதாம்.

கம்பனின் ஒரு பெருங் கொள்கையாகிய சமரஸம் போதிக்கும் இச் செய்யுளையும் சமயவாதிகள் தங்கள் மனப் போக்கிற்கு இசையப் பொருள் செய்து கொள்கிறார்கள்.

'உலகளந்த அரியே உயர்ந்தவனாயிருக்க, இதை அறியாமல் "அரன் பெரியவனா, அன்றி அரி பெரியவனா?" என்று கலங்கிப் பேசும் அறிவிலிகளுக்குப் பரகதி அரிதுதான்!' என்பர் மறந்தும் புறந்தொழாத வீர வைஷ்ணவர்கள்.

அதற்கு வீர சைவர்கள் விட்டுக் கொடுப்பார்களா? — விட்டுக் கொடுக்க



முடியுமா? 'அரனே அதிகன் என்பது தெள்ளத் தேறித் தெளிந்த விஷயமாயிருக்க இதை அறியாமல், "அரன் அதிகனா? உலகத்தை அளந்து விட்டதால் ஒருவேளை அரி பெரியவனாயிருக்கக் கூடுமா?" என்று சந்தேக வாதம் செய்யும் மூடர்களுக்கு முக்தி இல்லை' என்று வீர சைவர்களும் இச் செய்யுளுக்கு அர்த்தம் செய்யக் கூடும்.

ஆனால் மதாவேசக்காரர்களின் அர்த்தம் அநர்த்தம்தான்! சாதாரணத் தமிழனுக்கோ இந்தச் செய்யுளைப் படித்ததும், 'அரியும் சிவனும் ஒண்ணு; அறியாதவன் வாயில் மண்ணு' என்று சாதாரணமாக நாட்டில் வழங்கும் பழமொழி ஞாபகத்திற்கு வரும்.

இன்னும் வழியிலுள்ள வேறு இரண்டு மலைகளைக் குறித்துச் சுக்கிரீவன் பிரஸ்தாபிக்கிறான். ஒன்று, தமிழ் நாட்டின் வட எல்லையாகிய வேங்கடமலை; மற்றது தென் தமிழ் நாடாகிய திருநெல்வேலிச் சீமையிலுள்ள பொதிய மலை.

அருந்ததி மலையில் பிரவேசிப்பது பிரயாசமான காரியமென்று கூறும் சுக்கிரீவன், 'மற்றை இரண்டு மலைகளிலும் நீங்கள் பிரவேசித்துவிட வேண்டாம்!' என்று எச்சரிக்கை செய்கிறான். ஏன்? அங்கே என்ன ஆபத்து?

திருப்பதி மலை

திருப்பதிமலை வடமொழி தென்மொழி நிலங்களுக்கு வரம்பாய், இரண்டுக்கும் மத்தியாய் இருக்கிறது. வேதம் முதலான நூல்களில் கூறியுள்ள பொருள்களுக் கெல்லாம் முடிவான பொருளாகிய பரம்பொருளை வேங்கடேச வடிவில் காட்டுகிறதாம். இப்படியெல்லாம் வேங்கடமலையின் பெருமையில் ஈடுபடும் போது, 'அந்த மலைப் பிரதேசத்தில் போய்ச் சேருங்கள்' என்றுதான் முதன் முதல் சொல்லத் தோன்றுகிறது சுக்கிரீவனுக்கும்:

வடசொற்கும் தென்சொற்கும்
 வரம்பிற்றாய், நான்மறையும்
 மற்றைநூலும்
இடைசொற்ற பொருட்கெல்லாம்
 எல்லையதாய் நல்லறத்துக்(கு)
 ஈறாய், வேறு
புடைசுற்றும் துணையின்றிப்
 புகழ்பொதிந்த மெய்யேபோல்
 பூத்து நின்ற
அடைசுற்றும் தண்சாரல்
 ஓங்கியவேங் கடத்திற்சென்(று)
 அடைதிர் மாதோ.

[வடசொற்கும்—ஆதியில் வட திசையிலே வழங்கி வந்த மொழியாகிய ஸம்ஸ்கிருதத்துக்கும். தென் சொற்கும்—

தென் திசையிலே வழங்கும் தமிழுக்கும். வரம்பிற்ருய்—எல்லையாகி. நான்மறை —நாலு வேதம். இடை சொற்ற—தம் மிடத்தில் சொல்லியுள்ள. எல்லைய தாய்—எல்லையாகிய பரம்பொருளை யுடையதாய். ஈருய்—வரம்பாகி. வேறு புடைசுற்றும் துணையின்றி — பக்கத்தில் எடுத்துச் சொல்லத் தக்க உபமானப் பொருள் வேருென்றும் இல்லாமல். மெய்யே போல் — சத்தியம் போல். அடை சுற்றும்—தேன் கூடுகள் சுற்றிலும் நிரம்பப்பெற்ற. தண் சாரல்—குளிர்ந்த மலைப் பக்கங்களை யுடைய. அடைதிர்—அடையுங்கள்.]

இப்படிச் சொல்லிவிட்டு, 'அந்த வேங்கடமலையில் அருவினையின் பெரும் பகைவரான ஞானிகள் இருக்கிறார்கள்—பிறவிக்குப் பகைவர்கள்! அப் பெரியோரை அங்கே நேரில் போய்த்தான் வணங்கவேண்டு மென்பதில்லை; இங்கிருந்தே திக்கு நோக்கி வணங்குவதற்கு அவர்கள் உரியராவர்' என்கிருன் சுக்கிரீவன்.

இந்த வாக்கிலே, அந்தப் பிறவிப் பகைவர்களான தத்துவ ஞானிகளின் மகிமை தொனிப்பதோடு, 'அங்கே போய்ச் சேர்ந்து அந்த ஞானிகளோடு கலந்து இந்த வானர வீரர்களும் பிறவிப் பகைவராகி மோட்ச ஸாம்ராஜ்யத்தை அடைந்து விடலாகாதே!' என்ற கவலையும் தொனிக்கிறது.

எனவே, முதன்முதல் 'வேங்கடத்தில் சென்று அடைதிர்' என்று சொன்ன சுக்கிரீவன், ஏதோ உத்ஸாகப்போக்கிலே வாய்தவறிச் சொல்லி விட்டதொன்றை வாபஸ் வாங்கிக் கொண்டதுபோல,

கோடுறுமால் வரைஅதனைக்
குறுகுதிரேல், உம்நெடிய
கொடுமை நீங்கி
வீடுறுதிர்!

[கோடு உற — சிகரம் பொருந்திய. மால் வரை — பெருமை வாய்ந்த வேங்கடம். குறுகுதிரேல் — நெருங்கினீர்களானல். கொடுமை — (இங்கே) கொடிய பாவம். வீடு உறுதிர்—மோட்சம் அடைவீர்கள்.]

என்று எச்சரிக்கை செய்கிருன்.

இப்போது இவர்களுக்கு வேண்டியது மோட்சமன்று, காரிய சித்திதான். மறுவுலகம் அன்று, இவ்வுலகம் தான்; இந்த உலகத்திலே ராம காரியம் என்ற கைங்கரியம் ஒன்றேதான். திருப்பதியின் பெருமை தான் எவ்வளவு சாதுரியமாக வருணிக்கப் படுகிறது!

தமிழும் ஆபத்தா?

மோட்சம் என்ற விபத்தை விலக்கி விட்டுச் செல்லும்போது, திருநெல்வேலிச் சீமையில் அகஸ்திய மலையென்ற பொதிய மலையிலே காத்திருக்கிறதாம் வேருெரு ஆபத்து. தமிழ் முனிவரான அகத்தியனர் இருக்குமிடத்தில் தமிழ்ச் சங்கமும் இருக்குமல்லவா? அங்கே எப்போதும் தமிழ் விருந்து தானே? 'அந்தத் தமிழே ஆபத்து!' என்கிருன் சுக்கிரீவன்.


தமிழுக்கு ஆபத்தில்லை, தமிழே ஆபத்து! எப்படி?—அடுத்த வாரம் பார்க்கலாமே.



354. தமிழே ஆபத்து!

நம் முன்னோர் எட்டு மலைகளைக் ‘குல கிரிகள்’ என்று மதித்தனர். இமயத்தையும் கைலையையும் இரு வேறு குலகிரிகளாய்க் கருதினர். தெற்கேயுள்ள நீலகிரியும் ஒரு குலகிரிதான். வட இந்தியாவுக்கும் தென் இந்தியாவுக்கும் இடையேயுள்ள விந்திய மலையும் குலகிரிதான். மந்தரம், நிடதம், ஹேமகூடம் என்ற மூன்று மலைகளையும் சேர்த்து ஆதியில் ‘குலகிரி ஏழு’ என்று கருதி வந்தனர். நாளடைவில் கந்தமாதன மலையும் சேர்ந்து குலகிரிகளை எட்டாக்கி விட்டது. இம்மலைகளெல்லாம் இந்தியா என்ற பாரத கண்டத்தில் உள்ளன.

சுக்கிரீவன் (கம்பனின் சுக்கிரீவன்) தென் திசையில் செல்வோருக்கு மாத்திரம் தேடவேண்டிய இடங்களையும் வழிகளையும் கூறுவதால், விந்திய மலை ஹேமகூட மலை என்ற இரண்டு குலகிரிகளையும், அருந்ததி முதலான வேறு சில மலைகளையும் பிரஸ்தாபித்து விட்டுத் திருப்பதி மலையைச் சிறப்பாய்க் குறிப்பிட்டு, அகஸ்திய மலையாகிய பொதிய மலையையும் சிறப்பித்துப் பேசுகிறான்.




விந்தியமலை முதலானவற்றை ஸ்துதி செய்கிறானென்றால், திருவேங்கடத்தையும் பொதியமலையையும் நிந்தாஸ்துதி செய்து மற்ற மலைகளைக் காட்டிலும் அதிக அளவில் சிறப்பிக்கிறான். ‘புண்ய ஸ்தலமாகிய திருப்பதி மலையின் அந்தப் புண்ணியமே ஆபத்து!’ என்று கூறுவதுபோல், ‘தமிழ் முனிவரின் திருமலையில் அந்தத் தமிழே ஆபத்து, பேராபத்து!’ என்று எச்சரிக்கை செய்கிறான்.

மகாராஜாவின் பயம்

‘திருப்பதி மலையை நெருங்கி விட்டால் முக்தி அடைந்திடுவீர்கள்’ என்று பயந்தவன், ‘அகஸ்திய மலையை அடைந்தீர்களானால், அந்தத் தமிழ்ச் சங்கத்திலே ஸாயுஜ்யமாகி அதுவுடன் அதுவாய்க் கலந்து போவீர்களே!’ என்று அஞ்சுகிறான்:

தென்தமிழ்நாட்(டு)
அகன் பொதியில்
திருமுனிவன் தமிழ்ச்
சங்கம்
சேர்கிற் பீரேல்,
என்றும்அவன்
உறைவிடமாம்!
ஆதலினால் அம்மலையை
வலத்திட் டேகி,



பொன்திணிந்த
புனல்பெருகும்
பொருநையெனும்
திருநதிபின்(பு)
ஒழிய, நாகக்
கன்றுவளர்
நடஞ்சாரல்
மகேந்திரமாம் நெடுவரையும்
கடலும் காண்பீர்.

[தென் தமிழ் நாடு — தெற்குத் திசையில் இருக்கிற தமிழ் நாடாகிய பாண்டி நாடு. அகல் பொதியில்—அகன்ற பொதிய மலையிலே. திரு முனிவன் — தமிழ் என்ற செல்வச் சிறப்பையுடைய அகஸ்தியர். சேர்கிற்பீரேல் — சேர்வீர்களானால். என்றும் அவண் உறைவிடமாம் — எப்போதும் அங்கேயே வசிக்க நேர்ந்துவிடும்; அந்த இடத்திலேயே நித்யவாசம் செய்ய நேர்ந்து விடும்.

அம்மலையை வலத்திட்டு ஏகி — அந்த அகஸ்தியமலை வலத்தில் இருக்கும்படி பிரதட்சிணமாய் அதைக் கடந்து சென்று. பொன் திணிந்த — அழகு நிறைந்த. புனல் பெருகும் — தண்ணீர் பெருகுகின்ற. பொருநை — தாமிரபர்ணி. திருநதி — சிறந்த ஆறு. பின்பு ஒழிய — பின்னல் கிடக்குமாறு அதை விட்டு நீங்கி. நாகக் கன்று — யானைக் குட்டிகள். வளர் — வளர்கின்ற. தடம் சாரல் — விஸ்தாரமான மலைச்சாரல்கள். நெடுவரை — பெரிய மலை. காண்பீர் — காண்பீர்கள்.]

பாண்டிய மன்னர்கள் தமிழைத் தொன்று தொட்டுச் சிறப்பாக வளர்த்து வந்ததால், அவர்களைத் தமிழ் மன்னர்களென்றும், அவர்களுடைய நாட்டைத் தமிழ்நாடென்றும் சிறப்பித்துப் பேசுவதுண்டு. அத்தகைய தமிழ் நாட்டிலும் சிறப்பித்துப் பேசத் தக்கது, தென் பாண்டி நாட்டுக்கு வளமும் வனப்பும் தனிப் பெருஞ்சிறப்பும் தருகின்ற பொதியமலை என்ற அகஸ்தியமலை.



பொதியமலையைத் தூரத்திலிருந்து கண்டதுமே, 'ஆஹா, இவ்வளவு தூரம் வந்து விட்டு அந்தப் புனித மலையைப் பார்க்காமல் போவதா?' என்று தோன்றும். மலைக்குப் போனல் ஞான மலையாகிய குறு முனிவரையும் பார்க்க வேண்டியது தானே?

தமிழ் மலையில் தமிழ் முனிவரைப் பார்க்க வேண்டுமென்றால், தமிழ்ச் சங்கத்தோடு தானே பார்க்க முடியும்? சங்கம் போய்ச் சேர்ந்ததும் வந்து விடுகிறது ஆபத்து!

ஏன்? அங்கேயே மெய்ம்மறந்து நித்திய வாசம் செய்வீர்கள்! எப்போதும் 'தமிழ் விருந்து' நடந்து கொண்டேயிருக்கும். தமிழ்ப் பாட்டு, தமிழிசை, தமிழ்க் கூத்து — இவற்றை விட்டுப் போக எப்படி மனம் வரும், அனுமன் முதலிய ரஸிகமணிகளுக்கு?

'ஐயோ! அந்தத் தமிழின்பத்திலே உள்ளத்தைப் பறிகொடுத்தால், சீதையைத் தேடும் முயற்சியாகிய ராமகாரியமும் மறந்து போகுமே!' என்று சொல்லும்பொழுது, சுக்கிரீவன் வாயிலாகக் கம்பன் தமிழ்ச்சுவையில் எவ்வளவு தூரம் ஈடுபட்டுத் தாய்மொழிக்கு எத்தகைய மகோன்னத ஸ்தானம் கொடுத்திருக்கிறுன், பாருங்கள்!

உபாயம்

'தமிழ்' என்ற இந்த அபாயத்திலிருந்து தப்பிக் கொள்வதற்குச் சுக்கிரீவன் சொல்லும் உபாயம்தான் என்ன? அறிஞர்களும் ரஸிகர்களுமான அனுமன் முதலானவர்களைச் சிறிது தூரத்திலே பார்க்கும் அகஸ்தியர், அவர்களைச் சங்கத்திற்கு அழைத்துக்கொண்டு போய் அவர்கள் காதிலே தமிழ்ப்பாடல்களைப் போட்டுப் பார்க்கவேண்டுமென்று துடித்துக்கொண்டிருப்பாரல்லவா? அப்போது அவர்கள் அகஸ்தியமலை வலத்தில் இருக்கும்படி விலகிப்போக வேண்டுமாம்.

பிரதட்சிணமாக வருவார்களென்று முனிவர் எண்ணிக்கொண்டே, தமிழ்ச் சுவையில் ஈடுபடுவார். அப்படி அவர்

மெய்ம்மறந்திருக்கும்போதே, வானர வீரர்கள் அந்தப் பிரதேசத்தைக் கடந்து செல்லவேண்டும்! என்ன அபூர்வ ஆலோசனை!

தமிழ்ச் சங்கத்தைப் பார்த்து விட்டால், பிறகு அவர்கள் மகேந்திர மலையையும் தென்கடலையும் பார்க்கப் போவதேயில்லை; சீதையைத் தேடப் போவதில்லை! எனவே வேங்கடமலையை விலகிச் செல்வதுபோல் பொதிய மலையையும் விலகிச் செல்லவேண்டும். பாவத்தைப் போக்கும் அந்தப் புண்ணிய மலையைக் காட்டிலும், அறியாமையைப் போக்கும் இந்தத் தமிழ்மலை சிறந்தது; ஆதலால், இதைப் பிரதட்சிணம் செய்து போக வேண்டும்.

பொதியமலைப் பிரதேசத்தைக் கடந்து, தமிழோடு பிறந்த தாமிரபர்ணி யாற்றையும் தாண்டி, ஒரே ஓட்டமாகப் போய்த் தென்கடலை அடையவேண்டும் என்று சுக்கிரீவன் ஒரே மூச்சில் பேசி விடுகிறான்.

மோட்ச இன்பத்தைக் காட்டிலும் அதி வசீகரமானது தமிழின்பமென்று பயப்படுகிறான். மோட்சம் என்ற ஆபத்திலிருந்தும், தமிழ் என்ற ஆபத்திலிருந்தும் சாமர்த்தியமாகத் தப்பி, சீதா பிராட்டியைத் தேடி ஒரு மாதத் தவணையில் வந்து சேருங்கள் என்று சொல்லும் சுக்கிரீவன், அப்படிப்பட்ட வீர புருஷர்களுக்கு வேறு விதமான ஆபத்து ஒன்றும் ஏற்படமுடியாதென்று எதிர்பார்க்கிறான்.

திருப்பதியை அணுகாமல் விலகிப் போய்த் தொண்டைநாட்டை அடையுங்கள். அப்பால் சோழ நாட்டில் வந்து, மேற்கே சேரநாட்டையும் தெற்கே பாண்டி நாட்டையும் அடையுங்கள். அங்கே பொதிய மலையை அணுகாமல் விலகிப் போய்த் தாமிரபர்ணியைத் தாண்டி, மகேந்திர மலையையும் கடந்தீர்களானால் கடலைக் காண்பீர்கள். இது சுக்கிரீவன் காட்டும் யாத்ரா மார்க்கம்.

அனுமனைப் பிரதானமாகக்கொண்டு வானர மகாராஜா வழி விவரமும், திரும்பும் தவணை விவரமும் சொல்லி முடித்தவுடன், ஏற்கெனவே அனுமனுடைய தோற்றத்தாலும் 'சொல்லின் செல்வ'த்தாலும் வசீகரிக்கப் பெற்றிருந்த 'வில்லின் செல்வ'னும் அனுமன் மீது அளவு கடந்த நம்பிக்கை கொள்கிறான்.

* * *

'சீதையைக் காண்பாயானால், பயன்படும் சில அடையாளங்களைக் கேட்பாயாக' என்கிறான் ராமன், அனுமனைத் தனியே அழைத்துப் போய் ஓரிடத்தில் வைத்துக்கொண்டு:

'ஆண்டு கடந்(து) அப்புறத்தும்
எப்புறத்தும் ஒருதிங்கள்
அவதி யாகத்

தேண்டிஇவண் வந்நடைதிர்,
விடைகோடிர் கடிதெ'ன்னச்
செப்பும் வேலை,

நீண்டவனும் மாருதியை
நிறையருளால் உறநோக்கி,
'நீதி வல்லோய்!

காண்டியெனின், குறிகேட்டி'
எனவேறு கொண்டிருந்து
கழற லுற்றான்.

[ஆண்டு — அவ்விடத்தை. அப்புறத்தும் — அதற்கு அப்பாலும். ஒரு திங்கள் அவதியாக — ஒரு மாத காலம் தவணையாக. தேண்டி—தேடி. இவண் — இங்கே. வந்து அடைதிர் — வந்து சேருங்கள். விடை கோடிர்—விடை கொள்ளுங்கள். கடிது — விரைவாக. செப்பும் வேலை — சொன்ன போது; (இங்கே) கட்டளையிட்டபோது. நீண்டவன் — புகழில் நெடியோனாகிய ராமனும். மாருதியை — அனுமனை. உற நோக்கி — நன்றாக நோக்கி. காண்டியெனின் — சீதையைக் காண்பாயானால். குறி கேட்டி — அடையாளங்களை நான் சொல்லக் கேட்பாய். கழறல் உற்றான் — சொல்லத் தொடங்கினான்.]

ராமன் அனுமனுக்குச் சொன்ன அடையாளங்கள் எவை? அடுத்த வாரம்: சொன்னதும் சொல்லாததும்.




355. சொன்னதும், சொல்லாததும்

ராமன் அனுமனிடம் சீதையை அறிதற்குரிய அடையாளங்களாக முதன் முதல் சீதையின் அங்க லட்சணத்தையே வருணித்துக் கூறுகிறான். இந்த வருணனையில் கால் நகம் தொட்டுத் தலை ரோமம் மட்டும் துணிந்து வாய் கூசாது விவரமாக அவயவங்களையெல்லாம் வருணிக்கிறான். பிரம்மசாரியான அனுமனும் கூசாது கேட்கத் துணிகிறான்.

'அறியாமை அடுக்குகள்'

இந்த வருணனைப் பிரபந்தம் எப்படி ஆரம்பிக்கிறது தெரியுமா? பாற்கடலிலே பிறந்திருக்கின்றனவாம் சில செந்நிறப் பவழத் துண்டங்கள். அத்துண்டங்களுக்குச் செம்பஞ்சுக் குழம்பை ஊட்டி மேற்புறத்திலே சந்திரர்களையும் அணிவித்தால் எப்படியிருக்கும் தெரியுமா? எனக்குத் தெரியாது. சீதாபிராட்டியின் நகங்களோடு கூடிய கால் விரல்களாக இருக்குமாம்.

'இப்படியும் கம்பன் வருணித்திருப்பானா?' என்று நினைக்கிறீர்களா? சில பண்டிதர்களுக்கு ஐயமே ஏற்படுவதில்லை. 'பிராட்டியின் பொன் மேனி பாற்கடல் போன்றது! அத் திருமேனியிலுள்ள கால் விரல்களுக்குப் பாற்கடலில் பிறந்த பவளம் சரியான உவமை தான்!' என்கிறார்கள். 'இல்பொருள் உவமை' என்று மகிழ்ந்து போகிறார்கள்.



கால் விரல்கள் பாதங்கள் இவற்றை வருணித்துப் புற அடிகள் கணைக்கால்கள் ஆகியவற்றையும் வருணிக்கிறான் ராமன். கால் விரல்களுக்கு மட்டும் எப்படியோ உவமை காட்டத் துணிந்தவன், பாதங்கள், புற அடிகள், கணைக்கால்கள் முதலான அவயவங்களுக்கு 'உவமை இல்லை, உவமை இல்லை' என்று 'அறியாமை' யைத்தான் அடுக்கிக்கொண்டே போகிறான்.

சீதையின் அவயவம் எதற்கும் ஏற்ற உபமானம் இல்லை என்பதே பரதாதிகேச வர்ணனை யாகிவிடுகிறது. அதாவது, 'என்னால் வருணிக்க இயலவில்லையே' என்பது தான்! சீதாபிராட்டியைக் குறித்து, இராமபிரானின் வருணனை. எனினும் இந்த வருணனைகளையே அடையாளங்களாக அனுமன் தெரிந்து சீதையையும் தெரிந்து கொள்ள வேண்டுமாம்.

வரம்பு கடந்த வாக்கு

இப்படி இடை, வயிறு, தோள், முன் கை, கைநகம், கழுத்து, வாய்,

பல், சொல், மூக்கு, காது, கண், புருவம், நெற்றி, முகம், கூந்தல், நிறம், நடை எல்லாம் அறியாமை அடுக்குகளால் 'ஆஹா, ஓஹோ!' என்று வருணிக்கப் படுகின்றன. ஆபாச வருணனைகளும் காணப்படுகின்றன. இச் செய்யுள்களின் நடையோ சாமானியக் கவிராயர்களும் பெருமைப் படக் கூடிய நடையன்று.

இப்படிப் பாடல் ஒன்று, இரண்டா, அஞ்சா, பத்தா?— அஞ்ச வேண்டியது தான்: முப்பத்துநான்கு கவிகள், — அறுசீர் ஆசிரிய விருத்தங்கள் ஐயா!

வரம்பையும் கடந்த போது,
மற்றுரை வருக்க லாமோ?

என்பது இந்த வருணனைச் செய்யுள்களில் ஓர் அடி. இச் செய்யுள்களெல்லாம் 'வரம்பையும் கடந்த' வார்த்தைக் குவியல்களே!

ஒரு செய்யுளில் சீதையை லட்சுமி யென்றே ராமன் தன் 'மனுட' வரம்பையும் கடந்து சொல்லித் தீர்த்து விடுகிறான். 'நாம் மனுஷ்ய பாவனையில் அல்லவா இருக்கிறோம்?' என்பதையும் மறந்து விடுகிறான்: மானுடச் சட்டையில் தெய்வத் தன்மையை மறந்திருப்பதாக அல்லவா கம்பன் காட்டி வருகிறான்? ஆனால் சீதா பிராட்டியின் பாதாதிகேச வருணனை செய்யும் கம்பரோ அதை மறந்து விடுகிறார்!

கம்பனும், கம்பரும்

இக் கம்பர் கம்பனின் சொற்றொடர்களையும் தம் சொந்தச் சரக்கோடு கலந்து பரிமாறுகிறார்! கம்பனுடைய மனோபாவத்தையும் 'காப்பி'யடிக்க முயன்று தம்மை யறியாமலே நமக்கு நகைச் சுவையும் ஊட்டுகிறார்!

'சிவந்த வாய்ச் சீதை' என்று கூனியம்மாள் சொல்லி வைத்தாளே, அந்தச் சிவந்த வாயை வருணிக்கப் புகுந்த கம்பர்,

சிவந்தநேர் அமிழ்தம் இல்லை;
தேன் இல்லை!

என்று பரிதவிக்கிறார். சிவந்த அமிழ்தமும் தேனும் இருந்தால் சரியாக வருணித்து விடுவாராம். ஐயோ பாவம்! தேனின் நிறத்தையும் அறியாரோ இக் கவிச் சக்ரவர்த்தி? சிவந்ததோர் தேனும் இல்லையென்கிறாரே!

'ஐயோ பாவம்!' என்று இரங்கித்தான் கவிச் சக்ரவர்த்திக்கு வியாக்யான சக்ரவர்த்திகள் உதவ முன்வருகிறார்கள். 'அமிர்தம் தான் பார்த்ததில்லை, தேன் கூடப் பார்த்திருக்க மாட்டாரா? கல்வியிற் பெரியவரல்லவா? தேன் செந்நிறமுடையது தான் என்று தெரிந்தும் இப்படிச் சொல்வானேன் என்றால், செந்தேனும் சீதை வாய்போல் அவ்வளவு செந்நிற முடையதன்று' என்கிறார்கள். நன்று மதியழகு! நன்று கவியழகு!

சீதையின் வருணனைகள் இக்காவியத்தில் பல இடங்களிலும் வருகின்றன அல்லவா? அவற்றையும் படித்து இந்த வருணனைப் பாடல்களையும் தயவு செய்து படித்துப் பாருங்கள்.

சூர்ப்பணகையின் 'சீதை வருணனைப் பிரபந்த'த்தைப் படித்து ரஸித்தவருக்கு இராமபிரானின் இந்தச் 'சீதை வருணனைப் பிரபந்த'த்தை எப்படித்தான் சகிக்க முடிகிறதோ?

போலிக் கம்பரின் இப்பாடல்களைக் 'கம்பரசம்' பருகும் ரஸிகர்களுக்கே ஏகபோகமாய் ஒதுக்கிக் கொடுத்து விட்டு மேலே சொல்வது தான் முறையாகும். இந்தப் பாதாதிகேச வருணனை முழுமையும் ராமன் — கம்பராமன் — சொல்லாதது. இனி ராமன் சொன்ன அடையாளங்களைக் கேட்போம்.

உபயோகமான அடையாள வார்த்தை

அனுமனை நிறைந்த அருளால்
பொருந்த நோக்கியவன் — பூர்ண கிருபையுடன் கடாட்சித்த ராமன்,

காண்டியேனின் குறி கேட்டி —

[காண்டியேனின் — நீ சீதையைக் காண்பாயானால், குறி கேட்டி — அவளிடம் சொல்ல வேண்டிய அடையாளங்களை நான் சொல்லக் கேட்பாய்.]

என்ற பீடிகையுடன் பேசிய அடையாளங்கள் அவயவ வர்ணனைகளல்ல என்று தீர்மானிக்கலாம்.

அக்காலத்துச் சம்பிரதாயத்தை ஒட்டிக் கம்பன் 'பாதாதிகேசம்' பாடியிருந்தால், எவ்வளவு பொருத்தமான இடத்தில் அமைத்திருப்பான்! பாடல்கள்தான் இவ்வளவு மோசமாக இருந்திருக்க முடியுமா? எனவே 34 கவிகளையும் மறந்து மேலே செல்லவேண்டியதுதான்.

முன்னை நாள் முனியொடும்
முதியநீர் மிதிலைவாய்ச்
சென்னிநீள் மாலையான்
வேள்வி காணிய செல,





அன்னம்ஆடும் துறைக்(கு)
அருகு நின்றாளை அக்
கன்னிமா டத்திடைக்
கண்டதும் கழறுவாய்

[முன்னை நாள் — முன்னாளில். முனியொடும் — விசுவாமித்திர முனிவரோடும். முதியநீர் மிதிலைவாய் — பழைய நீர்வளமுள்ள மிதிலை நகரிலே. சென்னி நீள் மாலையான் — சிரசில் நீண்ட கிரீடமாலை தரித்த ஜனகமன்னன். வேள்வி காணிய செல — யாகம் காணச் சென்றபோது. அன்னம் ஆடும் துறைக்கு — ஆண் அன்னம் தன் பேடையுடனே விளையாடிக் கொண்டிருந்த அகழியின் நீர்த் துறைக்கு. அருகு — அருகிலே. அக் கன்னிமாடத்திடை — கன்னி மாடத்தின் உபரிகையிலே. கழறுவாய்—சொல்வாய்.]

என்ற கவிக்கே வந்து விட வேண்டியதுதான்.

தனக்கும் சீதைக்குமே தெரிந்திருந்த சில அடையாளங்களை இரகசியமாக அனுமனுக்குத் தெரிவிக்க விரும்பிய

ராமன், தன் காதலின் முதற் காட்சியைக் குறிப்பிடுகிறான்.

'முதன் முதல் நான் என் காதலியைச் சந்தித்தபோது அவள் கன்னிகா மாடத்தின் உபரிகையிலே நின்று கொண்டிருந்தாள். அகழியின் நீர்த் துறையில் அன்னம் தன் பேடையுடன் விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தாள்' என்கிறான் ராமன். இப்படிச் சொல்லும்போது பழைய நினைவு வெள்ளமாய்ப் பொங்கியிருக்க வேண்டுமல்லவா?

இந்த அடையாளத்தைச் சீதைக்கு அனுமன் தெரிவிக்கும்போது அவளுக்கும் அந்தப் பழைய நினைவு பொங்கி வர ஐயம் தெளிந்து இப்புதியவன்மீது எவ்வளவு நம்பிக்கையுள்ளவளாயிருப்பாள்!

பாலகாண்டத்திலே மிதிலைக் காட்சிப் படலத்திலே,

கன்னிம் மாடத்(து)
உம்பரின் மாடே,
கழிபேடோ(டு)
அன்னம் மாடும்
முன்துறை கண்(டு)ஆங்(கு),
அயல்நின்றாள்.

[கன்னிம் மாடத்து — கன்னியா மாடத்தின். உம்பரின் மாடே — மேலிடத்திலே. கழி பேடோடு — (அன்பில்) மிகுந்த பெட்டை அன்னத்துடன். அன்னம் ஆடும் — ஆண் அன்னம் விளையாடிக் கொண்டிருக்கும். முன்துறை — முன்னே உள்ள துறையை. நின்றார் — சீதை நின்றாள்,]

என்று வரும் அந்த நிகழ்ச்சியைத் தான் அடையாள வார்த்தையாக ராமன் சொல்லி அனுப்புகிறான் இப்போது.

வியாக்யானமா, விளையாட்டா?

ராமன் சொல்லும் அடையாள வார்த்தையைக் கொண்டே அந்த மிதிலைக் காட்சிப் படலத்தின் பாடலுக்குச் சரியான பொருளைக் கண்டு கொள்ளலாம். இது இவ்வளவு தெளிவாக இருந்தும், வியாக்யான பண்டிதர்கள் அந்த மிதிலைக் காட்சிப் படலத்துப் பாட்டுக்கு விநோதமாய்ப் பொருள் கூறுகிறார்கள்.

ஆண் அன்னங்கள் பெட்டை அன்னங்களுடன் விளையாடிக் கொண்டிருந்த இடம் அகழியின் நீர்த்துறை இல்லையாம். கன்னியாமாடத்தின் மேலிடத்து முன்பக்கம்தானாம். 'முன் துறை' என்று சொல்லியிருந்தும் 'முன் துறை'க்கு 'முன் பக்கம்' என்றே பிடிவாதமாய்ப் பொருள் கொள்கிறார்கள்.

இந்த அன்னங்கள் நீர்த்துறையில் விளையாடாமல் கன்னிகா மாடத்தில் சீதையுடன் விளையாடுகின்றனவாம். 'விளையாடுவன போலும்' என்பர் ஒரு பிரபல உரையாசிரியர்.

கன்னிகாமாடத்தில் சீதையுடன் விளையாடும் ஆண் அன்னத்தையும் பெண் அன்னத்தையும் பார்த்ததும், ராம லட்சுமணர் விசுவாமித்திரர் ஆகிய மூவரும் அப்படியே நின்று விடுகிறார்களாம். 'ஆங்கு அயல் நின்றார்' — அதாவது அந்த இடத்திற்கு அருகே சென்று நின்று பார்க்கிறார்களாம்.

வேறொரு பொருளும் கூறுவதுண்டு. 'அன்னம்' என்றால் இங்கே அன்னப் பறவையன்று, பெண்தான். சீதைப் பெண்தான் என்கிறார்கள். கன்னியா மாடத்தின்மீது தோழிப்பெண்களுடன் அன்னம் போன்ற சீதை விளையாடிக் கொண்டிருந்தாளாம். அவள் விளையாடுவதைப் பார்த்ததும் அவ்விடத்திற்குப் பக்கத்திலேயே நின்று விடுகிறார்களாம் விசுவாமித்திரர் முதலிய மூவரும். ஆம், விசுவாமித்திர மகரிஷியும் தான்! விநோத வியாக்கியானம், — விபரீத வியாக்கியானமும் கூட!

கிஷ்கிந்தா காண்டத்திலே ராமன் உண்மையாகச் சொன்ன முதலாவது அடையாளப் பாட்டை நினைவில் வைத்துக் கொண்டால், வியாக்கியான விபரீதத்திற்கு இடமுண்டா? ஆனால் இந்த நினைவாற்றல், பாதாதிகேச வருணனைப் பாடல்கள் போன்ற போலிப் பாடல் 'கம்பரசம்' பருகுவோருக்கு ஏற்படுவது சிரமம் தானே?



356. நான்கு அடையாளங்கள்

ராமன் அனுமனிடம் வேறு சில அடையாளங்களும் சொல்லுகிறான். சீதையும் காட்டுக்கு வருவதாகப் பிடிவாதம் பிடிக்க அதற்கு ராமன், 'நீ இதன் விளைவை நினைத்துப் பார்க்கவில்லை. பிடிவாதத்தால் எல்லையற்ற துன்பந் தரப்போகிறாய் !' என்று வருந்திக் கூறினானல்லவா அந்தக் காலத்திலே? அதற்குச் சீதை, 'என் ஒருத்தியால் தான் துன்பம் போலும் ! என்னையும் துறந்த பின் எல்லாம் இன்பம் தானே?' என்று நிஷ்டூரமாகப் பதில் சொல்லவில்லையா? இந்த நிகழ்ச்சியை ஒரு முக்கியமான அடையாளமாக ராமன் அனுமனிடம் குறிப்பிடுகிறான்.

அன்றும் இன்றும்

அயோத்தியா காண்டத்திலே, நாடு துறந்து காடு செல்லும் அந்தச் சந்தர்ப்பத்திலே இக்காட்சி எப்படி வருணிக்கப்படுகிறதென்று முதன் முதல் பார்க்கலாம். சீதை துணிந்து மாவுரி கட்டிக்கொண்டு ராமன் கையைப் பிடித்துக்கொண்டு புன்னகை செய்கிறாள். ஒரு வெற்றிப் புன்னகை; தன்னுடைய நோக்கத்திலே தான் வெற்றி பெற்று விட்டதாக ஒரு திருப்தி, ஒரு மகிழ்ச்சி. ஒரு வசீகரமான முல்லைச் சிரிப்பு, முத்துச் சிரிப்பு,— ஏன், முல்லையும் முத்தும் எதிர்த்தாலும் வெல்ல முடியாத வெண்ணகை. ஆனால் ராமன் சொன்னதென்ன ?

'முல்லை யும், கடல்
முத்தும் எதிர்ப்பினும்,
வெல்லும் வெண்ணகை —
யாய் ! விளை(வு) உன்னுவாய்
அல்லை, போத
அமைந்தனை ஆதலின்,
எல்லை அற்ற
இடர்தரு வாய் !' என்றான்.

[முல்லை—முல்லை மலர். வெண்ணகையாய்—வெண்ணிறமுள்ள இளஞ்சிரிப்பையுடையவளே. உன்னுவாய் அல்லை— நீ நினைத்துப் பார்க்கவில்லை. போத அமைந்தனை — புறப்படச் சித்தமாகி விட்டாய்.]



அதை இப்போது எப்படி ஞாபகப்படுத்திக் கொண்டு அடையாளமாகச் சொல்லுகிறான் பாருங்கள்:

'முன்பு நான்
அறிகிலா
முளிநெடுங்
கானிலே



என்பினே போதுவான்
  நினைதியோ ஏழை நீ?
இன்பமாய் ஆருயிர்க்(கு)
  இனியைஆ யினை; இனித்
துன்பமாய் முடிதியோ?'
  என்றதும் சொல்லுவாய்.

[முன்பு நான் அறிகிலா — இதற்கு முன் நானே பார்த்தறியாத. முனி நெடுங் கானிலே — தீய்ந்து பாழாய்க் கிடக்கும் நீண்ட காட்டிலே. என் பினே — என் பின்னே. போதுவான் — வருமாறு நினைதியோ — நினைக்கிறாயோ. இன்பமாய் — இதுவரை இன்ப வாழ்க்கைக்குத் துணைவியாக இருந்து. ஆருயிர்க்கு இனியை ஆயினை — நமது அருமையான உயிருக்கும் இனிமை செய்பவளாக இருந்தாய். இனித் துன்பமாய் முடிதியோ — இனிமேல் துன்பம் செய்பவளாக முடிவாயோ.]

வரண்ட காட்டிலே பெண்பாலாகிய சீதையையும் உடனழைத்துச் செல்வது ஆபத்தாக முடியுமோ?— என்று முன் கூட்டியே ராமன் எச்சரிக்கை செய்ததை இப்போது அடையாளமாகச் சொல்லியனுப்புவதில், 'நான் அப்போது சொன்னபடியே பலித்து விட்டதல்லவா? அன்றே என் சொல்லைக் கேட்டிருந்தால் இப்படி யெல்லாம் நேர்ந்திருக்குமா?' என்ற ஒருமிதமான அன்புக் கண்டனக் குறிப்பும் புதைந்து கிடக்கிறது.

ராமனுடைய எச்சரிக்கையைக் கேட்டதும் சீதை என்ன சொன்னாள் அந்தக் காலத்திலே?

கொற்ற வன்னது
  கூறலும், கோகிலம்
செற்ற தன்ன
  குதலையள் சிறுவாள்,
'உற்று நின்ற
  துயரம்இ தொன்றுமே!
எற்று றந்தபின்
  இன்பம்கொ லாம்?' என்றாள்.

[கொற்றவன் — ராமன். அது கூற லும் — அப்படிச் சொன்னதும். கோகிலம் செற்ற தன்ன குதலையள் — சீதை. உற்று நின்ற துயரம் — இப்போது பொருந்தி நின்ற துன்பம். இது — என்னையும் உடனழைத்துச் செல்வதாகிய இது. ஒன்றுமே — ஒன்றுதான். எற்று றந்த பின் — என்னையும் துறந்தபின். இன்பம் கொலாம் — இன்பமே தானே.]

ராமன் ஆற அமரச் செய்த எச்சரிக்கைக்கு மாறாகச் சிறிப் பேசினாள் சீதை. ராமனுடைய தர்க்க வாதத்தைத் தன்னுடைய பிடிவாதத்தால் எதிர்த்தாள். முல்லை நகையும் முத்து நகையும் அடையாத வெற்றியைச் சீற்றமும் பிடிவாதமும் கண்ணீரும்அடைந்து விட்டனவாம். அந்த 'வெற்றி' விளைத்த விளைவோ ?

இந்த ஞாபகமும் இதைத்தானே அடையாளமாகச் சொல்லத் தூண்டுகிறது:

'ஆனபே ரரசிழந்(து)
அடவிசேர் வாய்!உனக்(கு)
யானலா தனஎலாம்
இனியவோ இனி ?'எனா,
மீனுலாம் நெடுமலர்க்
கண்கள்நீர் விழவிழுந்(து)
ஊனிலா உயிரின்வெந்(து)
அயர்வதும் உரைசெய்வாய்.

[ஆனபேர் அரசு இழந்து — உனக்கு உரிய பெரிய அரசை இழந்து. அடவி சேர்வாய் — காட்டுக்குப் போகிறவனே. யான் அலாதன எலாம் — என்னைத் தவிர மற்றைப் பொருள்களெல்லாம். இனியவோ — இனிமை தருகின்றனவோ. எனா — என்று சொல்லி. மீன் உலாம் — மீன்கள் போலப் பிறழ்கின்ற. ஊன் நிலா உயிரின் — உடம்பில் நிற்க முடியாது தவிக்கும் உயிர் போல. வெந்து அயர்வதும் — உஷ்ணமாக மூச்சு விட்டு அசந்து நின்றதையும்.]

காதலியின் இள நகைக்குத் தோற்காத காதலன், கண்ணீருக்குத் தோற்றே போனான்! அந்தக் கண்ணீர் நிறைந்த கண்களை 'நெடுமலர்க் கண்கள்' என்று இப்போது குறிப்பிடும் வாக்கிலேயே காதல் நிறைந்து ததும்புகிறதல்லவா?

'வெந்து' என்று அந்தத் தவிப்பையும் உஷ்ணமான நெடுமூச்சையும் அப்படியே வினைத்துப் பார்த்துப் பேசுகிறான். கை கோத்துத் தன் அருகே நின்று கொண்டிருந்தாளல்லவா? 'வெந்து அயர்ந்ததும்' என்று அந்தச் சென்ற கால நிகழ்ச்சியைக் குறிப்பிடாமல், 'வெந்து அயர்வதும்' என்று கூறுகிறான். அந்த நிகழ்ச்சி இப்போதுதான் கண்முன் நிகழ்வது போலத் தோன்றுகிறதாம்.

இப்படியெல்லாம், 'காட்டுக்கு உடன் வந்தே தீருவேன்; உன் பிரிவைக் காட்டிலும் சுடுமோ காடு?' என்றெல்லாம் கொஞ்சியும் கோபித்தும், முத்துச் சுடர் நகை காட்டியும், முத்து முத்தாய்க் கண்ணீர் வடித்தும் காரிய சித்தி பெற்றுக் காட்டுக்குப் புறப்பட்டவள், காட்டைக் குறித்து அன்று எவ்வளவு அழகாய்த் தெரிந்து கொண்டிருந்தாள் தெரியுமா?

நகரத்தின் கோட்டை வாசலைத் தாண்டுவதற்கு முன்னமே, 'காடு எங்கே?' என்று கேட்டு விட்டாளாம். இது அயோத்தியா காண்டத்தில் சொல்லப்படவில்லை. அந்தச் சோகப் பிரவாகத்திலும் அலைகளிலும் சுழிகளிலும் மறைந்து போயிற்று இந்நிகழ்ச்சி.

இன்றும் இனிமேலும்

ஆனால், இப்போது ராமனுக்கும் ஞாபகத்திற்கு வந்து, கவிஞனுக்கும் ஞாபகத்திற்கு வந்து விடுகிறது :

மல்லல்மா நகர்துறந்(து)
ஏகுநாள் மதிதொடும்
கல்லின்மா மதில்மணிக்
கடைகடந் திடுதல்முன்,
'எல்லைதீர் வரியவெங்
கானம்யா தோ ?'எனச்
சொல்லினாள், அஃதெலாம்
உணரநீ சொல்லுவாய்.

[மல்லல் மாநகர் — வளத்தையுடைய அயோத்தி மாநகரம். துறந்து ஏகும்

நாள்—விட்டுச் சென்ற காலத்திலே. கல்லின் மாமதில் — கற்களால் ஆகிய பெரிய மதிலின். மணிக் கடை—அழகிய வாசல். கடந்திடுதல் முன் — கடப்பதற்கு முன்னே; (இங்கே) கடந்தவுடனே. எல்லை தீர்வு அரிய — எல்லையில்லாத. வெங்கானம் — கொடிய காடு.]

என்று ராமன் சொல்வதைக் கேளுங்கள்

பாப்பாவுடன் ஒருவர் திருநெல்வேலியிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டார். திருநெல்வேலி ரயில்வே ஸ்டேஷனுக்கு வரும் வழியிலே ஒரு குளத்தைக் கண்டதும் பாப்பா, 'சென்னைக் கடல் என்று சொல்லிக் கொண்டிருந்தாயே அப்பா, அதுதானோ இது?' என்று கேட்டுக் கொண்டே குளத்தைச் சுட்டிக் காட்டினாளாம். அதே கதைதான், சீதை கோட்டை வாசலைத் தாண்டியதுமே காட்டைக் குறித்து விசாரிக்கத் தொடங்கியதும்.

இந்த அடையாள வார்த்தை அனுமன் வாக்காகச் சுந்தர காண்டத்திலும் வருகிறது. அங்கே இன்னும் சுந்தரமாக வருகிறது:

நீண்டமுடி வேந்தன்அருள்
ஏந்திநிறை செல்வம்
பூண்டதனை நீங்கி,நெறி
போதலுறும் நாளின்,
ஆண்டநகர் ஆரையொடு
வாயில்அக லாமுன்,
'யாண்டையது கான்?' என
இசைத்ததும் இசைப்பாய்.

[நீண்டமுடி வேந்தன்—தசரத சக்ரவர்த்தி. அருள் ஏந்தி நிறை செல்வம் பூண்டதனின்—அவனுடைய அருளால் கிடைத்த நிறைந்த செல்வமாகிய மகா ராஜ்யத்தை. நெறி போதலுறும் நாளின்—காட்டுவழியே செல்லத் தொடங்கிய அந்நாளில். ஆண்ட நகர் — அயோத்தி மாநகரத்தின். ஆரையொடு வாயில் அகலாமுன்—கோட்டை வாசலைக் கடந்தவுடனே. யாண்டையது கான் — எங்கேயிருக்கிறது காடு. என இசைத்ததும்—என்று நீ (சீதை) சொன்னதும். இசைப்பாய்—சொல்லுவாய்.]

என்று சொல்லப் போகிறான் அனுமன் சீதையை நோக்கி.

கணையாழி கொடுப்பதற்கு முன் அனுமன் மீது சீதைக்கு நம்பிக்கை ஏற்படச் செய்யும் ஒரு நல்ல அடையாளம் இது. சக்கரவர்த்தியின் அருள் தாங்கி ராமன் அரசாளப் போய்க் காடு புக நேர்ந்த அந்தச் செய்தியை வசீகரமாய்ச் சொல்லத் தொடங்கி அப்பால் நடந்த இந்தச் சிறு நிகழ்ச்சியை அடையாளமாய்க் காட்டப் போகிறான்.

கோட்டை வாசலைத் தாண்டியதும், 'காடு எங்கே?' என்று சீதை கேட்டதாக அந்த அறியாமையை அறிவிக்கும் இந்தக் கதையிலே சீதைக்குக் கிடைக்கப் போவது அடையாளம் மட்டுமா? அனுமன் மீது நம்பிக்கை மட்டுமா? ராமனுக்குத் தன்மீதுள்ள பேரன்பையும் சீதை தெரிந்துகொள்ளப் போகிறாள். தனக்கு விடுதலை விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இந்த அடையாளத்தால் ஏற்படக் கூடியதுதான்.

இந்த விதமாக ராமனுடைய அருளுடனும், அவன் சொன்ன நான்கு முக்கிய அடையாளங்களுடனும் அனுமன் விடை பெற்றுச் சீதையைத் தேடப் போகிறான்.



357. சோலையிலும் பாலையிலும்

தென் திசை தவிர மற்றத் திசைகளில் போய்த் தேடுமாறு விந்தன் முதலிய வானர வீரர்களைச் சுக்கிரீவன் விடை கொடுத்து அனுப்பி வைத்தான். அவர்களும் பெருஞ் சேனையுடன் குதூகலமாய்க் குதி போட்டுச் சென்றார்கள்.

'அந்த ஆசாமிகளின் செய்தியை நான் இங்கே கூறப்போவதில்லை; (கிழக்கும் வடக்கும் மேற்கும் சென்றவர்களின் செய்தி நம் கதைப் போக்கிற்குத்தான் அவ்வளவாக அவசியமில்லையே.) தெற்கே போனவர்களின் செய்தியை இனி எடுத்துரைப்போம்' என்ற கவிக் கூற்றுடன், அனுமன் முதலானோர் தேடிச் சென்ற கதை ஆரம்பமாகிறது.


தமிழ்க் காதலுடன் யாத்திரை

இக்கவிக் கூற்றிலும், — அதாவது, இத்தென் திசைச் செய்திக்குப் பீடிகையிலும் — கம்பனின் தென் தமிழ்க் காதல் இனிது புலனாகிறது :

வன்றிசைப் படருமா(று)
ஒழிய, வண்டமிழுடைத்
தென்திசைச் சென்றுளார்
திறன்எடுத் துரைசெய்வாம்.

[வல் திசை படரும் ஆறு ஒழிய — வலிய திசைகளிலே செல்லும் வகையைக் கூறாமல் விட்டு. வண்டமிழுடை — வளமான தமிழ் மொழியையுடைய.]

தமிழை 'வண்டமிழ்' என்றும், தமிழ் மொழி வழங்காத மற்றைத் திசைகளை 'வன்றிசை' யென்றும் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. செவிக்கினிய செஞ்சொல் வளம் உள்ளது தமிழ் என்பதும், மற்றத் திசை மொழிகள் கரடு முரடான வலிய ஓசைகளை உடையன என்பதும் கவிஞனின் அபிப்பிராயம், — இல்லை, அபிமான துரபிமானங்கள் !



இத்தகைய மனநிலையைச் சமய ஞானிகளிடத்திலும் காணலாம். பெரியவாச்சான் பிள்ளையென்ற வியாக்கியான சக்ரவர்த்தியும் தென்திசையை 'ஆழ்வார்

களின் ஈரச் சொல்' நடையாடும் தேசமென்றும், வட திசையை வலிய ஓசைகளோடு கூடிய முரட்டுப் பாஷை பேசுவோர் சஞ்சரிக்கும் தேசமென்றும் தமது தமிழபிமானம் தோன்றக் கூறியுள்ளார்.

வானரர்கள் விந்தியமலையை அடைகிறார்கள். அங்கே சித்திரச் செம்பொடியோடு, கற்கள்போல், ஓடுகள் போல் சிதறிக் கிடக்கும் இரத்தினக் கற்களையும், பாம்புகளையும், நீரருவிகளையும் காண்கிறார்கள். சுடர் மணிச்சிகரங்களையும், அச்சிகரங்களிலே பொற் குகைகளையும் கண்டு பிடிக்கிறார்கள். ராமாயண வானரப் பிரமுகர்களுடன் நம் கவிஞன் மானஸிக யாத்திரையிலே விந்தியம் கண்டதுதான், வேறு விந்தியம் கண்டதில்லை!—என்றுதான் தோன்றுகிறது. இந்த 'விந்திய'ப் பாடல்களும் பாராட்டத் தக்கவாறு அமைந்திருக்கவில்லை.

அங்கேயிருந்து நருமதை யாற்றை நோக்கிச் செல்லும் போதும், கவிஞனுக்குத் தமிழ்க் காதல் பொங்குகிறது. 'அடடா, நம் அமிழ்தினும் இனிய தமிழ் மொழி வழங்கும் திசையை நோக்கியல்லவா இந்த ராமதூதர்களை அழைத்து வருகிறோம்?' என்ற மனநிலை ஏற்படுவது போலிருக்கிறது.

'பூமிக்கு முடி மணிபோல் சிறந்து விளங்குகிற தென்திசை' என்று தமிழ் விளைந்த திசையைப் பாராட்டுகிறான். இவ்வளவு பாஷாபிமானமும் தேசாபிமானமும் கூட வாக்கை வளமுற விளைத்து விடவில்லை; வண்டமிழாக்கி விடவில்லை!

நருமதையாறு 'கடலோ!' என்று மயங்கும்படியாகப் பரந்து கிடக்கிறதாம். வானர வீரர்கள் மட்டுமா மயங்கிப் போகிறார்கள்? கடலில் தாகசாந்தி செய்து கொள்ளப் புறப்பட்ட மேகங்களும் நதியைக் கடலென்று மயங்கி அப்பால் போகாமல் அங்கேயே படிந்து நீர் பருகுகின்றனவாம். மேகங்களோடு க்ஷேமமாய் எருமைக் கன்றுகளும் ஆற்று நீரைக் குடித்துக் கொண்டிருக்கின்றனவாம். எருமைக் கன்றுகளையும் 'மேகக் கன்றுகள்' என்று மேகங்கள் மயங்கி விட்டனவா? — கவி சொல்லவில்லை.

நர்மதை யாற்றிலே, விளையாடும் அன்னங்களைப் பார்ப்பது போல் நீராடும் தெய்வப் பெண்களையும் பார்க்கிறார்கள் வானர வீரர்கள். ஆற்றங்கரையில் சோலை மலர்களிடையே தேன்வண்டுகள் சஞ்சரிப்பது போல் தேவர்களும் சஞ்சரிக்கிறார்களாம். ஆனால், சீதாதேவியைத் தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு இந்தத் தேவதேவியர் பிரமாதமாய்த் தோன்றப் போகிறார்களா, என்ன?

மதயானைகளும், மதயானைகள் போலத் திரிகின்ற தேவதேவியர்களும் பிற்பட, முற்பட்டு நர்மதை யாற்றைக் கடந்து செல்லுகிறார்கள் வானர வீரர்கள். ஹேமகூடம் என்ற பொன்னிற மலையை அடைகிறார்கள். அம்மலைக்கு அருகேயுள்ள குன்றுகளும் மரங்களும் மற்றைப் பொருள்களும்கூடத் தம் இயற்கை நிறம் மாறிப் பொன்மயமாய்ச் சுடர்கின்றனவாம். இம்மலையிலுள்ள அருவிகளும் நீரோடைகளும், எரிகின்ற நெருப்பிலே பொன் உருகிப் பாய்வதுபோலக் காண்கின்றனவாம்.

இம்மலையை ராவணன் இருக்குமிடமென்று அனுமன் முதலானவர்களும் மயங்கிச் சீதையைக் கண்டு பிடித்து விடலாமென்று உவகை கொள்கிறார்களாம். ஆனால், பலன் என்ன?

திரிந்தனர் எங்கணும்,
திருவைக் காண்கிலர்.

[எங்கணும்—மலையெங்கும். திரு—சீதாலட்சுமி.]

ஹேமகூட மலையை விட்டு இறங்கிய பின், 'இனிமேல் பிரிந்து சென்று தேடினால் குறித்த தவணைக்குள்ளே தென் திசை முழுவதையும் தேடிப் பார்த்து விடலாம்' என்பது அங்கதன் முதலான தலைவர்களின் தீர்மானம். இத் தீர்மானத்திற்கு இணங்க, சேனைகள் தனியே பிரிந்து போய்த் தேடிக் கடை—

சியாக மகேந்திர மலையில் வந்து சேர வேண்டுமென்று கட்டளை யிடுகிறார்கள். பிறகு சேனாதிபதிகளான அங்கதன் ஆகியோர் தாங்களும் தனியே தேடப் போகிறார்கள்.

பாலை வனத்திலே

சேனைகளைப் பல கூறுகளாய்ப் பகுத்துப் பல இடங்களுக்கும் அனுப்பி வைத்த பின், அனுமன் முதலான தலைவர்கள் வழி நடந்து ஒரு பாலைவனத்தை அடைகிறார்கள்:

சூரியன் வெருவும்ஓர்
சுரத்தை நண்ணினார்.

[சூரியன் வெருவும் — வெப்பம் தருகின்ற சூரியனும் நடுங்கும்படியான வெப்பத்தையுடைய. சுரம் — பாலைவனம். நண்ணினார் — போய்ச் சேர்ந்தார்கள்.]

விந்தியம், ஹேமகூடம், நர்மதையாறு ஆகியவற்றை வருணிக்கும் போதே வளங் குன்றிப் போன வாக்கு, இந்தப் பாலைவன வருணனையிலும் வறண்டு போகிறது என்பதைக் குறிப்பிடவேண்டும். இப் பாலைவனத்தின் கொடிய வெப்பத்தினால் தரையில் காலூன்ற மாட்டாது வானரர்கள் தாவித் தாவிக் குதித்துக் குதித்துப் போகிறார்களாம். சுட்ட சட்டியிலிருந்து துள்ளுகிற நெல்லுப் பொரிகள் போல் துள்ளித் துடித்தார்களாம்:

சூட்டகல் மேல்எழு
பொரியிற் றுள்ளினார்.

[சூட்டகல்—சூடு பெற்ற சட்டி.]

தவித்துத் தடுமாறிய வானர வீரர்கள் பூமியின் கீழ் நிலவறை போலிருந்த பிலத்துவாரம் ஒன்றைக் கண்டு, 'இதற்குள் புகுந்து பாலைவனச் சூட்டுக்குத் தப்பிப் பிழைப்போம்' என்று நுழைகிறார்கள். உள்ளே பயங்கர இருட்டு மூடிக் கொள்ளவே, போகும் வழியும் தெரியாமல் வந்த வழியும் தெரியாமல் மயங்குகிறார்கள்.



அந்த நிலையில் அனுமன் அவர்களை நோக்கி, ' அஞ்ச வேண்டாம், என்னைப் பிடித்துக் கொண்டு விட்டுவிடாமல் தொடர்ந்து வாருங்கள் ' என்கிறான். அவர்கள் கோலைப் பிடித்துச் செல்லும் குருடர் போல் அனுமனுடைய நீண்ட வாலைப் பிடித்துத் தொடர்ந்து செல்கிறார்கள். அனுமனே கையால் தடவி வழி கண்டு செல்லுகிறான்.

மீண்டும் தமிழ்க் காதல்

இப்படிப் போய்க் கொண்டிருக்கும்போது இருள் படிப் படியாக நீங்குகிறது. தேஜோமயமான நகரம் ஒன்று சோலைகளுடனும் தடாகங்களுடனும் மாடமாளிகைகளின் வரிசைகளுடனும் காணப்படுகிறது. சூரியப் பிரகாசமே தேவையில்லை யென்று சொல்லும்படி சுயம்பிரகாசமா யிருக்கிறது.

இந்திர நகரமும்
இணை இ லாதது !

என்று வருணிக்கப் பெறுகின்றது இந் நகரம்.

எனினும், குலோத்துங்க சோழனைப் பாடிப் பரிசு பெற்ற தமிழ்ப் புலவர்களின் மனைகள் போலத்தான் இருக்கின்றனவாம் சுயம்பிரகாச நகர மாளிகைகளும் !

ஆம், மறுபடியும் தமிழபிமானமும் தமிழ் நாட்டபிமானமும் தான்:

புவிபுகழ் சென்னிபே
ரமலன் தோள்புகழ்
கவிகள்தம் மனையெனக்
கனக ராசியும்,
சவியுடைத் தூசும்,மென்
சாந்தும் மாலையும்,
அவிர்இழைக் குப்பையும்
அளவி லாதவே !

[புவிபுகழ் — உலகம் புகழும். சென்னிபேரமலன் — குலோத்துங்க சோழன் என்ற பேர் பெற்ற, குற்றமில்லாத, அரசனின். தோள் புகழ் கவிகள்தம்—வீரத்தோளைப் புகழ்ந்து பாடிய கவிகளின். மனையென—மனைகள் போல. கனக ராசியும் — பொற் குவியல்களும். சவியுடைத் தூசும் — ஒளியுள்ள ஆடைகளும். மென்சாந்தும் — மென்மையான கலவைச் சந்தனமும். மாலையும் — பூமாலைகளும். அவிர் இழைக் குப்பையும் — ஒளி வீசும் ஆபரணக் குவியல்களும். அளவிலாதவே — அளவில்லாமல் நிறையப் பெற்றிருந்தது அந்நகரம்.]

பன்னிரண்டாம் நூற்றூண்டின் இறுதிப் பகுதியில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் காலத்திலே வாழ்ந்தவன் கம்பன் என்பது ஆராய்ச்சி அறிஞர்களின் தேர்ந்த கொள்கை. இக்குலோத்துங்க மன்னனைத்தான் ' சென்னி பேரமலன் ' என்று கவிஞன் பாராட்டியிருப்பதாகக் கருதலாம். இம் மன்னனின் காலத்திற்குப்பின் சோழ மகா ராஜ்யம் வீழ்ச்சி நிலையுற்றது. இவனே கடைசி வீர மன்னன். இவனது வெற்றிச் சின்னங்களே திரிபுவனக் கோயில் முதலியன.

தன் வீரம் பாடிய கவிஞர்களுக்கு இவன் பொன்னும் விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் முதலியனவும் கணக்கில்லாமல் வழங்கிவந்தானும். எனவே இவனைப் பாடிய கவிஞர்களின் இல்லங்கள் செல்வக் களஞ்சியமாகத் திகழ்ந்தனவாம். தேவேந்திர ராஜதானியின் மாளிகைகளும் ஈடில்லை யென்று கவி பாடிப் புகழும் சுயம்பிரகாச நகர மாளிகைகளும், குலோத்துங்கனைப் பாடிய புலவர் பெருமக்களின் மனைகள் போலத்தான் இருக்கின்றனவாம் !

இப்படிக் குலோத்துங்கனைப் புகழ்வதிலிருந்து கம்பனின் பாஷாபிமான தேசாபிமானங்களுடன் நன்றியறிவும் வெளிப்படுகிறதென்று ஊகிக்கலாம். இதனால், கம்பன் சோழனது ஆஸ்தான கவியாக அமர்ந்திரா விட்டாலும் இச் சோழனுடைய ஆதரவை ஒரு காலத்திலாவது பெற்றிருந்தான் என்று ஊகஞ் செய்வது தவருகாது.



358. சுயம்பிரபை கதை


‘அந்த நகரத்திலே சீதை இருக்கக் கூடுமோ?’ என்று அனுமன் முதலானோர் சந்தேகித்தனர். அதன் செல்வச் சிறப்பும் பொன்மயமான நீண்ட நகர வாசலும் ‘அது தான் ராவண லங்கையோ?’ என்று பிரமிக்கச் செய்து விட்டன. வானர வீரர்கள் உள்ளே புகுந்து தேடத் தொடங்கினர்.

சித்திர நகரமா ?

அந்த நகரத்திலே அரக்கர் மட்டுமா?—அசுரர் அரக்கர் தேவர் மனிதர் எல்லாரும் காணப்பட்டனர்.

கிண்கிண் என்று ஒலிக்கக் கூடிய சதங்கைகள் அணிந்த மாதர்கள் காணப்பட்டனர். ஆனால், அந்தச் சதங்கைகள் ஒலி செய்யவில்லை. அப் பாவையர் சித்திரப் பதுமைகள்போல் அழகு வாய்ந்தவர் மட்டுமல்ல; சித்திரப் பதுமைகள் போல் சஞ்சரிக்கவுமில்லை, உறங்கவும் இல்லை !

அங்குள்ள மனிதர்களும் இந்த வானர வீரர்களிடம் ஒன்றும் பேசவில்லை. இவர்களை நோக்கவேயில்லை. உண்மையில் அவர்கள் எல்லாரும் சித்திரப் பதுமைகள் அல்லது சிலைகளிலுள்ள செயற்கை மனிதர்களே !



வானர வீரர்கள் பிரமித்துப் போனார்கள். இங்கே உணவுப் பொருள்களுக்குப் பஞ்சமே இல்லை. அமுதினும் இனிய சோறு முதலான பலவகை உணவுப் பொருள்களும் செழித்துக் காணப்பட்டன. கனி வகைகளோ திரள் திரளாய்க் குவிந்திருந்தன. கம்மென்று நறுமணம் கமழ உணவுப் பண்டங்களெல்லாம் ‘பனிப்பெட்டி’யில் பாதுகாக்கப் பெற்றது போலக் காணப்பட்டன !

மதுபான வகைகளும் காணப்பட்டனவாம். இவற்றை வருணிக்கும் போதே தமிழ் வெறியும் பிறந்து விடுகிறது :

தமிழ்நிகர் நறவமும்
தனித்தண் தேறலும்

[தமிழ் நிகர்—தமிழை ஒத்த. நறவமும்—மணமுள்ள மதுவும். தனித் தண் தேறலும்—ஒப்பற்ற குளிர்ந்த தெளிந்த கள்ளும்.]

இந்தச் சந்தர்ப்பத்திலே பாரதியாரின் ‘தமிழ்த் தாய்’ சொல்வதையும் ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்:

கள்ளையும் தீயையும் சேர்த்து —
நல்ல
காற்றையும் வான வெளியை
யும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் —
பல
தீஞ்சுவைக் காவியம் செய்து
கொடுத்தார்.

தமிழை ஒத்த தீஞ்சுவை — மதுவகைகளும் உணவு வகைகளும் மலிந்திருந்தும், நுகர்வதற்கு மனிதர்கள் இல்லாத மாயம் என்னவோ? — வானரர்களுக்குப் புரியவில்லை :

வாவி உள, பொய்கைஉள :
வாசமணம் நாறும்
காவும்உள ; காவிவிழி—
யார்மொழிகள் என்னக்
கூவும்இள மென்குயில்கள்,
பூவை,கிளி, கோலத்
தூவிமட அன்னம்,உள :
தோகையர்கள் இல்லை!

[வாவி — நீர்விளையாட்டுக்குரிய நடை வாவிகள். வாச மணம் நாறும் — மிக்க மணம் வீசுகிற. கா — பூஞ்சோலைகள். காவி விழியார் — கருங்குவளை மலர் போன்ற விழிகளையுடைய பெண்கள். பூவை — மைனு. கோலத் தூவி மட அன்னம் — அழகிய இறகுகளையுடைய இளமையான அன்னப் பறவைகள். தோகையர்கள் — பெண்கள்.]

என்ற பிரமிப்படன்தான் அங்குமிங்கும் திரிந்து பார்க்கிறார்கள் வானரவீரர்கள்.

பெண்களின் நீர்விளையாட்டுக்கு வேண்டிய நீர்நிலைகள் இருக்கின்றன. பூப்பறித்து விளையாடத் திவ்ய பரிமளம் வீசும் பூஞ்சோலைகள் இருக்கின்றன. கொஞ்சிப் பழகக் குயில், மைனு, கிளி ஆகிய பறவைகள் நிரம்பியிருக்கின்றன. மென்னடை பயின்றும் கற்பித்தும் போதுபோக்க அன்னங்களும் காணப்படுகின்றன. ஆனல், அன்ன நடை மின்னிடையார் மாத்திரம் இல்லையே! வானர வீரர்கள் அதிசயிக்கிறார்கள்.

'மாயையோ இது?' என்று பிரமித்த பின், 'பூமியிலிருந்து இறங்கி வந்தோமே, இது பாதாளமாயிருக்கலாமோ?' என்று எண்ணுகிறார்கள். பொன் மயமாக எங்கும் தோன்றுவது கண்டு, 'சொர்க்கமோ இது? அப்படியானல் நாம் செத்துப் போய்விட்டோமா?' என்றெல்லாம் 'கன்னு பின்னு'வென்று ஆலோசிக்கிறார்கள்.

அப்போது ஜாம்பவான், 'சீதையைத் திருடிச் சென்ற ராவணனது சூழ்ச்சிதான் இது! சீதையைத் தேடிவருவோர் இடைவழியிலே மாயப் பொறியில் மாட்டிக்கொள்வதுபோல் விழுந்தழிய வேண்டுமென்று அந்த வஞ்சகன் தோண்டி வைத்த மாயப் படுகுழி இது!' என்று வருந்திக் கூறுகிறான். அனுமன் ஜாம்பவானைத் தேற்ற, எல்லாரும் சஞ்சலத்தை விட்டுத் தைரியமடைகிறார்கள்.

சீதையா? சங்கு மனியா?

இந்த விசித்திர நகரத்தினிடையே தவமெல்லாம் ஓர் உருவெடுத்து வந்தாற்போல் ஒரு தோற்றம் காண்கின்றனர்.

நற்றவம் அனைத்தும்உரு
நண்ணிஒளி பெற்ற
கற்றைவிரி பொற்சடையி —
னுள்எதிர் கண்டார்.

[உரு நண்ணி — உருவம் பெற்று. ஒளிபெற்ற கற்றை விரி பொற்சடையினளை — பொன்னிற ஒளி நிறைந்த, தொகுதியாக விரிந்த, சடையை உடையவளை.]

மாதவமே வடிவு கொண்டாற்போன்ற பெண்ணொருத்தி தலைமயிர் சடை முடியாகித் தரைமீது படிந்து கிடக்க, அரைக்கண் பார்வையாய், மூக்கு நுனியை நோக்கிய வண்ணம் காணப்படுகிறாள். உடம்பு சாயாமல் சலியாமல் நேராக நிமிர்ந்து நிற்க, புறங்கைகள் தொடைகளில் பொருந்தியிருக்கின்றன. அகங்கைகள் மலர்ந்த தாமரை போல் மேல் நோக்கி விளங்கு

கின்றன. யோக நிஷ்டையில் அமர்ந்திருப்பது போன்ற பெண் —சிலைதானு? பேச்சுமில்லை, மூச்சுமில்லையே!

சுவாச பந்தனம் செய்து கொண்டிருக்கிறுள், தவநிஷ்டையில் அமர்ந்து. சித்திரப் பெண்ணல்ல, சிலைப் பெண்ணல்ல. நிஜப் பெண், தவப் பெண். அந்தக் கண்வழி ஒளிரும் கருணை கண்டு வானரவீரர்கள் அந்த யோகினியை வணங்குகிறுர்கள்.

'சீதைதான் இப்படித் தவநிஷ்டையில் அமர்ந்திருக்கிறுளோ?' என்று கூடப் பிரமித்துப் போகிறுர்கள். அப்போது அனுமன், 'அப்படியல்ல' என்று தன் கருத்தை அழுத்தமாக வெளியிடுகிறுன்:


'அக்குவடப், முத்தமணி
ஆரம்அதின் நேர்நின்(று)
ஒக்கும்எனின், ஒக்கும்!'என
மாருதி உரைத்தான்.

[அக்குவடம்—(இங்கே) சங்குமணிகளால் ஆகிய ஆரம். முத்து மணி ஆரம் அதின் — முத்தினுல் இயன்ற ஆரத்துடன். நேர் நின்று — நேராக நின்று. ஒக்கும் எனின் — ஒத்திருக்குமாயின். ஒக்கும் என — இவளும் சீதையை ஒத்திருப்பாளென்று. மாருதி — அனுமன்.]

'சங்கு மணிவடத்துக்கும் முத்து மாலைக்கும் உள்ள ஒற்றுமை தான் இவளுக்கும் சீதைக்கும்!' என்று அனுமன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, தவப் பெண் நிஷ்டை கலைந்து பொறுமையும் குலைந்து பொங்குகிறுள். ஒரு தவப் பெண் முன் பல ஆடவர்கள் தோன்றியது தவத்திற்கும் இடையூறு, தகாத செயலும் கூட என்பது கோபத்திற்குக் காரணம்.

தவம் பலித்தது

'நீங்கள் யார்? இங்கு வந்த காரணம் என்ன?' என்று தவமாது சீறிக் கேட்



டதும், வானர வீரர்கள் சீதையைத் தேடிவந்திருப்பதாகப் பதில் சொல்கிறார்கள். உலகத்திலே அறநெறியை நிலைநிறுத்திவரும் ராமபிரானின் தூதர்கள் என்றும் தங்களை அறிவித்துக் கொள்கிறார்கள்.

அது கேட்ட தவ அணங்கு அடங்கா மகிழ்ச்சியுடன் துள்ளி யெழுந்து இன்பக் கூத்தாடுகிறாளாம், தவ ஒழுக்கத்திற்குரிய அடக்க ஒடுக்கங்களை யெல்லாம் துறந்தவளாகி. ஆனந்தக் கண்ணீர் பெருக அம்மாது வானர வீரர்களை நோக்கி, 'உங்கள் வரவு நல்வரவாகுக' என்று குசலப்ரச்நம் செய்து விட்டு, 'எம்பெருமான் எங்கே எழுந்தருளியிருக்கிறான்?' என்று கேட்கிறாள். அனுமன் ஆதியோடந்தமாக ராமனுடைய வரலாற்றைத் தெரிவிக்கிறான்.

தன் பெயர் 'சுயம்பிரபை' என்று சொல்லி விட்டு அந்தத் தவப் பெண்ணும் தன் வரலாற்றைத் தெரிவிக்கிறாள். அசுரத் தச்சனான மயன் தேவ மாதர்களில் ஹேமை என்பவளைக் காதலித்தானும். ஹேமை சுயம்பிரபையின் உயிர்த் தோழி. அவளும் அந்த அசுரத் தச்சனைக் காதலித்ததால், சுயம்பிரபை அந்தக் கலப்புக் காதல் மணத்திற்கு உதவி செய்தாள். தோழியை மயனிடம் சேர்ப்பித்தாள். அவர்கள் இந்த நகரத்திலே வாழ்ந்தார்கள். தோழி மீதுள்ள பாசத்தால் சுயம்பிரபையும் இங்கே தங்கி விட்டாள். தேவேந்திரன் தேடிக்கொண்டு புறப்பட்டான். இங்கே காதலர்களைக் கண்டு பிடித்ததும் மயனையும் ஹேமையையும் எச்சரிக்கை செய்துவிட்டுச் சுயம்பிரபையை நோக்கி, 'நீ என்னுடைய நகரத்திலிருந்து ஓர் அப்ஸரஸைக் கடத்திய குற்றம் செய்திருப்பதால், இந்த நகரத்தைக் காவல் செய்து கொண்டு இங்கேயே இருக்கக் கடவை' என்று கோபமாய்ச் சாபமிட்டானும்.

சுயம்பிரபை இந்திரனை வணங்கிச் சாப விமோசனம் வேண்டினாள். அப்போது தேவேந்திரன் மன மிரங்கி, 'ராமதூதர் இங்கே வரும்போது சாப விமோசன மாகும்' என்று சொல்லி விட்டு, ஹேமையுடன் தேவலோகம் போய் விட்டான். இங்கே சுயம்பிரபை சுகமாய்க் காலந்தள்ளுவதற்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் அப்படியே விட்டுத்தான், இந்திரன் இந்திரலோகத்திற்குப் போனான்.

இவ்வாறு தன் கதையைச் சொல்லி வந்த சுயம்பிரபை, 'என்னுடைய சுக வாழ்வுக்கு, போக வாழ்வுக்கும் கூட, இங்கே பொருள்கள் நிறைய இருந்தும், நான் துறவியாகி உங்களைக் காண வேண்டி நெடுங்காலம் தவங்கிடந்தேன்' என்கிறாள்.

'உங்களைக் காணப் பெற்றேன்; என் சாபமும் தீரப் பெற்றேன். இனி இப்பிலத்தை விட்டுப் போக வேண்டியது தான். ஆனால் வெளியேறும் வழி அறியேன்' என்கிறாள் சுயம்பிரபை. தேவேந்திர சாபமே இருளாக நிறைந்து மேலேறிச் செல்லும் வழி தெரியாதபடி தடைப்படுத்துகிறது என்பதையும் தெரிவிக்கிறாள்.

'மேல் உலகம் ஏறும் நெறி காணேன்' என்று சுயம்பிரபை சொன்ன பின் அனுமன், 'சற்று நடுங்காமல் இருங்கள்' என்று புன் சிரிப்புடன் சொல்லுகிறான். உடனே பெரு வடிவம் கொண்டு வானுற நிமிர்கின்றான். பிலம் தலைதிறந்து வெட்ட வெளியாகிவிட, எல்லாரும் வெளியே வந்து விடுகிறார்கள்.

அனுமனைப் புகழ்ந்து கொண்டே சுயம்பிரபை சொர்க்கம் போகிறாள். வானர வீரர்களும் அனுமனைப் புகழ்ந்து பேசிக் கொண்டே தாங்கள் செல்ல வேண்டிய வழியை நிதானித்துக் கொண்டு போகிறார்கள்.




359. போகும் வழியிலே

வழி நடந்த களைப்பும் பசியும் தாகமுமாய் வந்து கொண்டிருக்கிறார்கள். சுயம்பிரபை அளித்த அமுதம் போன்ற உணவை உட்கொண்ட பின் நெடுந்தூரம் அன்னபானம் இல்லாமல் தான் வந்திருக்கிறார்கள்.

சமையாத விருந்து

அந்தப் பிலத்திலிருந்து வெளிப்பட்ட பின்பு சுக்கிரீவ மகாராஜா குறிப்பிட்ட யாத்ரா மார்க்கத்திலேயே வந்து, ஒரு நீர்நிலையைக் கண்டு பெருமகிழ்ச்சியடைகிறார்கள். அந்தப் பொய்கைக் கரையிலே வளமான தோப்பும் கண்டு, 'இங்கே தங்கிப் போகலாம்' என்று தீர்மானிக்கிறார்கள்.

பொய்கையின் குளிர்ந்த நீரை அள்ளிப் பருகித் தாகம் தணிந்த பின், கரையிலும் அருகிலும் பரவியிருந்த அத்தோப்பிலே காய்கனிகள் செழித்திருப்பதைப் பார்க்கிறார்கள். அங்கங்கே தேன் கூடுகள் தொங்குவதையும் காண்கிறார்கள்.



சுயம்பிரபை அன்புடன் அளித்தது சமைத்த உணவு (அடிசில்). இங்கே இயற்கை அளித்தது சமையாத உணவு. இல்லை, 'சூரியன் சமைத்த' சாப்பாடு.

அது அறுசுவை உண்டிதான்; எனினும் சுயம்பிரபையின் அந்த அன்பை ஏழாவது சுவையாகக் கொண்டு 'எழுசுவை உண்டி' கிடைத்து விட்டதாகப் பூரித்துப் போனார்கள், அனுமன் முதலான வானர வீரர்கள். இங்கே பசியே ருசியாகப் பல்சுவை உண்டி கிடைத்து விட்டது போல், காய்கனிகளை உண்டு தேனையும் பருகி ஆனந்தமாக நித்திரை செய்யத் தொடங்குகிறார்கள்.

அப்போது சொந்தக்காரன் வருகிறான்—ஆம், பொய்கைக்கும் தோப்புக்கும் சொந்தக்காரன். ஆக்கிரமிப்புக்காரரைப் பார்க்கிறான். ஏற்கனவே முரடன்:

கண்டார் பொய்கைக்
கண், அகல் நன்னீர்
கையார
உண்டார்; தேனும்
ஒண்கனி காயும்;
ஒருகூழல்
கொண்டார் அன்றே
இன்துயில்; கொண்
குறி உன்னித் [ட
தண்டா வென்றித்
தானவன் வந்தான்,
நகவில்லான்.

[கண்டார்—கண்டவர்களாகிய வானரர்கள். பொய்கைக்கண்—பொய்கையிலுள்ள. அகல் நன்னீர் —பரவிய நல்ல தண்ணீர். கை ஆர—கை நிறைய. ஒண்கனி—நல்ல கனிகள். ஒரு குழல்—ஓரிடத்தில். இன் துயில்—இனிய உறக்கம். கொண்ட குறி உன்னி—துயில் கொண்ட அந்தக் குறிப்பை நினைத்துப் பார்த்து. தண்டா வென்றி — நீங்காத வெற்றியுள்ள. தானவன் — அசுரன். தகவில்லான் — நற்குணமில்லாதவன்.]

அறையோ அறை!

இந்தத் தோப்புக்கார முதலாளி நற்குணமில்லாத ஓர் அசுரன் என்று தெரிந்து கொண்டோம். உற்று நோக்கி அந்தக் கறுத்துப் பருத்த 'அசுரத்' திருமேனியை நன்றாகத் தெரிந்து கொள்வோம்:

மலையே போல்வான்,
மால்கடல் ஒப்பான்,
மறம்முற்றக்
கொலையே ஒப்பான்,
கூற்றை நிகர்ப்பான்,
கொடுமைக்(கு) ஓர்
நிலையே போல்வான்,
நீர்மைஇ லாதான்;
நிமிர்திங்கள்—
கலையே போலும்
காலஎ யிற்றான்;
கனல்கண்ணான்!

[மால்கடல்—கரிய பெரிய கடல். மறம் முற்ற—கொடுமை மிகுந்து முதிர. கொலையே ஒப்பான் — கொலைத் தொழிலே ஓர் உருவம் கொண்டது போன்றவன். கூற்றை நிகர்ப்பான்-உடம்பிலிருந்து உயிரைப் பிரிக்கும் யமனை ஒத்திருப்பவன். நீர்மை இலாதான் —நல்ல சுபாவம் சிறிதும் இல்லாதவன். நிமிர் திங்கள் கலையே போலும்—உயரத் தோன்றுகிற சந்திரனது பிறை போன்ற. கால எயிற்றான்—விஷம் போல் கொடிய கோரப் பற்களையுடையவன். கனல் கண்ணான்—கோபக் கனல் சொரியும் கண்களை உடையவன்.]

வானர வீரர்கள் நடந்த களைப்பும் உண்ட மயக்கமுமாய் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் போதே, 'மலையோ, கடலோ?' என்று யாரும் மயங்கத்தக்க கொடிய கொலையுருவம் ஒன்று, செம்பட்ட மயிரும் தீக்கங்கு போன்ற கண்ணும், குறைமதி போன்ற கோரப்பல்லுமாய்க் கூற்றுவன் போல வந்து சேர்கிறது.

அந்த உருவம் கைகளைப் பிசைந்து கொண்டே, 'இந்தப் பொய்கை என்னுடையது என்று தெரிந்தும் இவர்கள் எவ்வளவு நெஞ்சுத் துணிவுடன் இங்கே வந்து கவலையின்றி நீட்டி நிமிர்ந்து கிடக்கிறார்கள்! அற்ப புத்தியுள்ள இந்த ஆசாமிகள் யாரோ?' என்று தன் அற்ப புத்தியைக் கொண்டு சற்று ஆலோசித்துப் பார்க்கிறது.

ஆனால் ஆலோசனையைக் காட்டிலும், 'அடிடா, பிடிடா!' என்ற அடா நெறியில் நம்பிக்கையுள்ள பேர்வழியானதால், பளிச்சென்று ஒரு வானரத்தின் மார்பிலே கையை ஓங்கி ஓர் அறை கொடுக்கிறான். அறை உதவுகிற மாதிரி ஆலோசனை உதவுமா? — என்றுதான் எண்ணம்.

எழுப்பிக் கேட்டிருக்கலாம், 'யாரையா நீங்கள்? என் சொத்திலே வந்து ஆக்கிரமிப்புச் செய்யத் துணிந்தீர்களே!' என்று. கேட்டு எச்சரிக்கை செய்திருக்கலாம்; எச்சரிக்கை செய்து போராடியும் இருக்கலாம். ஆனால் அசுரனல்லவா? 'அறையோ அறை' என்று அறைந்துவிட்டான், உறங்குகிறவனின் நெஞ்சிலே பார்த்து.

அந்த அறை எந்த வானரத்தின் நெஞ்சிலே விழுந்தது தெரியுமா?

ஐயன் அங்கதன்
அலங்கல் மார்பினில்
கையின் மோதினான்,
கால னேஅனான்.

[அலங்கல் மார்பினில் — பூமாலை அணிந்த மார்பிலே. காலனே அனான் — யமனைப்போன்ற அசுரன்.]

அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த அங்கதன் விழித்துக் கொள்கிறான். உறக்கம் மாறி இன்னும் தெளிவு பிறக்கவில்லை. அந்த நிலையில் 'இவன் தானோ இலங்கை வேந்து?' என்று எழுந்து நேராக நெஞ்சிலே அங்கதனும் ஓர் அறை கொடுக்கிறான்.


வாலி மகனல்லவா? அந்த ஒரே அறையோடு அப்படியே அசுரன் கீழே அலறிக் கொண்டு விழுகிறான். 'பேய் அறையப் பிள்ளை பிழைக்குமா?' என்ற கதைதான்.

அசுரன் கொடுத்த அறை அங்கதனுக்கு உறக்கம் தீர்த்தது: அங்கதன் அறையோ அசுரனுக்குப் பிறவி மயக்கத்தையே தீர்த்து விடுகிறதாம். இந்த அங்கத — அசுர யுத்தம் எத்தகைய மின்னல் — வேகத்தில் முற்றுப் பெறுகிறது பாருங்கள் :

'இற்றி வன்கொலாம்
இலங்கை வேந்து?' என,
எற்றி னானைநேர்
எற்றி னான்,அவன்
முற்றி னான்!

[இற்றிவன் கொலாம் இலங்கை வேந்து — இப்போது வந்துள்ள இவனே லங்கேச்வரனாகிய ராவணன் போலும். என — என்று எண்ணி. எற்றினானை — தன்னை அறைந்த அசுரனை. நேர் எற்றினான் — தானும் அந்த அறைக்கு மாறாக ஒரு அறை கொடுத்தான். அவன் முற்றினான் — அந்த அசுரன் தீர்ந்தே போனான்.]

இடி விழுந்து மலை சரிவது போல் அசுரன் சாய்ந்ததும், மெய்ம் மறந்து உறங்கிக் கொண்டிருந்த வானரர்களெல்



லாம் விழித்துத் தோள் கொட்டி எழுந்து அசுரன் விழுந்த இடத்தைச் சூழ்ந்து கொள்கிறார்கள். ஆனால் செத்த பாம்பை யடிக்கும் வித்தகரல்ல இவர்கள்!

விரைந்து தேடுதல்

'இவன் துமிரன் என்ற அசுரன்' என்று ஜாம்பவான் தெரிவிக்கிறான். பிறகு வானர வீரர்கள், 'இன்னும் வேறு எந்த அசுரனாவது போருக்கு வந்தாலும் வரக்கூடும்' என்று உறங்காமல் அந்த இரவை அங்கே கழித்துச் சூரியன் உதிக்கும் தருணத்தில் அங்கு நின்று புறப்படுகிறார்கள் சீதையைத் தேடி. பெண்ணை நதியைக் கடந்து,

காடு நண்ணினார்;
மலை கடந்துளார்.

விதர்ப்ப நாட்டை யடைந்து வானர வீரர்கள் முனிவர் – வடிவங்கொண்டு சீதையைத் தேடிப் பார்க்கிறார்களாம். பிறகு தண்டக வனம், முண்டகத் துறை ஆகிய பிரதேசங்களில் சீதையைத் தேடுகிறார்கள் :

தண்ட கத்தையும்
தடவி ஏகினார்;
முண்ட கத்துறை
கடிது முற்றினார்.

[கடிது முற்றினார் – விரைவாகச் சேர்ந்தார்கள்.]

கோதாவரி தீரத்திலே

பாண்டுமலை தாண்டிக் கோதாவரி நதியை அடைகிறார்கள்.

எழுகின்ற திரையிற்(று) ஆகி
இழிகின்ற மணிநீர் யாறு,
தொழுகின்ற சனகன் வேள்வி
தொடங்கிய சுருதி சொல்லா
உழுகின்ற பொழுதின் ஈன்ற
ஒருமகட்(கு) இரங்கி, ஞாலம்
அழுகின்ற கலுழி வாரி
யாமெனப் பொலிந்த தன்றே!


[எழுகின்ற திரை இற்று ஆகி – எழுந்து வீசுகிற அலைகளை யுடைய தாய். இழிகின்ற – இறங்குகின்ற; பள்ளம் நோக்கிப் பெருகி வருகின்ற. மணிநீர் யாறு – முத்துப்போல் தெளிவான நீரையுடைய ஆறு. தொழுகின்ற சனகன் – அரசனாகவும் தத்துவ ஞானியாகவும் எல்லாராலும் தொழப்படுகின்ற ஜனகன். வேள்வி தொடங்கிய–வேள்வி தொடங்கும்படி. சுருதி சொல்லா உழுகின்ற பொழுதின் - வேள்விச்சாலை அமைக்கும் இடம் தூய்மை பெற வேண்டுமென்று வேதமந்திரம் சொல்லி உழுதபொழுது. ஈன்ற – பெற்ற; உழுபடைச்சாரலில் தோன்றும்படி வெளிப்படுத்திய. ஒரு மகட்கு இரங்கி – ஒரே மகளான சீதையின் சிறைவாசத்திற்காக வருந்தி. ஞாலம் - சீதையின் தாயாகிய பூமிதேவி. கலுழி – கண்ணீர். வாரி–வெள்ளம். பொலிந்த தன்றே – விளங்கிற்று.]

சீதையைத் தேடிச் செல்லும் வானர வீரர்களின் கண்களில், கோதாவரியில் நிறைந்து பெருகிவரும் வெள்ளம் அவ்வளவும் பூமி தேவி தன் மகளான சீதைக்காக வடிக்கும் கண்ணீர் வெள்ளம் போல் தோன்றுகிறதாம். இந்த நதிக்கரை முழுவதும் தேடிப் பார்த்தும் சீதையைக் காணப் பெறாமல், கோதாவரி நதியைக் கடந்து அப்பால் வெகு தூரம் போய்விடுகிறார்கள்.

சுவண நதியையும் கடந்து குலிந்த தேசத்திலும் போய்த் தேடிப் பார்க்கிறார்கள். பிறகு எழுவகைப்பட்ட கொங்கண தேசங்களிலும் தேடுகிறார்கள். மேல் பக்கமாக உள்ள கடற்கரைப் பிரதேசங்களிலும் தேடிப் பார்க்கிறார்கள்.

அருந்ததி மலையையும் அடைந்து தேடுகிறார்களாம். அங்கும் சீதையைக் காணாமல் 'மாகதப் பெருங்குன்று' என்ற மலைப் பிரதேசத்திலும் போய்த் தேடுகிறார்கள். அப்பால் தமிழ் நாட்டின் வட எல்லையாகிய திருப்பதிக்கு வந்து சேருகிறார்கள்.

இனிமேல் அனுமன் முதலானவர்களின் தமிழக யாத்திரை தொடங்குகிறது.



360. தமிழகத்திலே ராமதூதர்கள்

தென் திசையில் சீதையைத் தேடுமாறு அனுப்பி வைக்கும்போது சுக்ரீவன், 'நீங்கள் தமிழ் நாட்டின் வட எல்லையான திருப்பதி தாண்டிப் போய் அந்த காடெல்லாம் பார்க்கவேண்டும்' என்று கட்டளையிட்டானல்லவா? அந்தச் சுக்ரீவ ஆக்ஞைக்கு இணங்க அனுமன் முதலானவர்கள் தமிழகத்தை நோக்கி வந்து திருப்பதி மலையை அடைகிறார்கள். வந்து சேர்ந்ததும், அந்தச் சுக்ரீவ ஆக்ஞையை மீறவும் துணிகிறார்கள்!

'வடவேங்கடம் தென்குமரி' என்ற எல்லைகளையுடைய தமிழகத்திலும் தேட வேண்டுமென்று வந்து சேர்ந்தவர்கள்,

வேங்கடத்(து) இறுத்த
எல்லை

[இறுத்த — வரையறுக்கப்பட்டுள்ள.] என்ற இந்த எல்லைக்கு வந்து சேர்ந்ததாகக் கவிஞன் குறிப்பிடுவதைக் கேளுங்கள்.


தமிழகத்தின் வட எல்லையைத் திருவேங்கடமென்று வரையறுத்துக்கூறுவது கவனிக்கத் தக்கது. நமது ஆந்திர சகோதரர்கள் வடக்கே யிருந்து சென்னை வரையிலும், அப்பாலும் கூட, பாத்தியதையை நீள விட்டுப் பார்ப்பர் பின்னொரு காலத்திலே என்பது தெரியாது கவிஞனுக்கு —பாவம்!

திருப்பதி மலைமீது

இனி, வானரர் (இம்மலையில் வேறு வானரங்களும் உண்டு—இவை வேறு ஜாதி!) கண்ட திருப்பதியைப் பார்க்கலாம். சுக்ரீவன் வர்ணித்த திருப்பதி, வடசொல்லாகிய ஸம்ஸ்கிருதத்திற்கும் தென்சொல்லாகிய தமிழுக்கும் மத்தியாகி, 'புகழ் பொதிந்த' ஸத்தியம் போல நிமிர்கின்றது.

இம் மலைச் சாரல்கள் குளிர்ச்சியாய்த் தேன் கூடுகள் நிரம்பிய காடுகள் உள்ளனவாக வர்ணிக்கப்பெற்றுள்ளன.

இங்கே பெரியோர்கள் இருப்பதாகவும் சுக்ரீவன் கூறியுள்ளான். இப்பெரியோரை முனிவர்களாகவும், வேதம் வல்லோராகவும், தத்துவ ஞானிகளாகவும் இப்போது வானரர்கள் கண்டு கொள்கிறார்கள்.



எங்கே தெரியுமா? ஆகாச கங்கை பாப விநாசம் முதலான அருவிப் பக்கங்களில் கண்டு பிடிக்கிறார்கள்.

ஆம்; அருவிஸ்நானம் செய்யும் போதே, 'அதோ அவர் முனிவர்; இதோ இவர் வேதசாஸ்திர நிபுணர்; அதோ தத்துவ ஞானிகள்; இதோ சித்தர்கள்' என்றெல்லாம் கண்டு கொள்கிறார்களாம்.

இது மட்டுமா? அருவி பெருகிவரும் ஆழ்வார் தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், தும்புரு தீர்த்தம், கோனேரி முதலான புண்ணிய தீர்த்தங்களில் தேவர்கள் — ஸ்ரீமான்கள் ஸ்ரீமதிகள் எல்லாரும் தான்—வந்து வந்து நீராடுகிறார்களாம்:

முனிவரும், மறைவ லோரும்,
  முந்தைநாள் சிந்தை மூண்ட
வினைவரும் நெறியை மாற்றும்
  மெய்யுணர் வோரும், விண்ணோர்
எனைவரும், அமரர் மாதர்
  யாவரும், சித்தர் என்போர்
அனைவரும் அருவி நன்னீர்
  நாளும்வந்(து) ஆடு கின்றார்:

[மறைவலோரும் — வேதம் வல்லவர்களும். முந்தைநாள் சிந்தை மூண்ட வினைவரும் நெறியை மாற்றும் மெய் உணர்வோரும் — முன்னாளில் மனம் மூண்டு செய்த தீவினை நெறியைப் புரட்சிகரமாக மாற்றிக் கொள்ளுமாறு ஸத்தியத்தை உணர்ந்து கொண்டவர்களும். விண்ணோர் எனைவரும் — தேவர்கள் எல்லாரும். அமரர்மாதர்—தெய்வப் பெண்கள்.]

சுக்கிரீவன் இவர்களைக் குறித்துக் கூறியதெல்லாம் உண்மைதான். அதாவது, இவர்கள் பக்தி வாயிலாக முக்தி—ஏணியில் விரைந்து கொண்டிருப்பவர்களே என்பதை அனுமன் முதலான வானர வீரர்கள் இப்போது தெளிவாய்த் தெரிந்து கொள்கிறார்களாம்:

வலங்கொள் நேமி
  மழைநிற வானவன்
அலங்கு தாளிணை
  தாங்கிய அம்மலை
விலங்கும் விடுறு—
  கின்றன, மெய்ந்நெறிப்
புலன்கொள் வார்கட்(கு)
  அனையது பொய்க்குமோ?

[வலங்கொள் நேமி — வலது கையில் சக்ராயுதம் உள்ள. மழைநிற வானவன் — மழைமேகம் போன்ற நிறத்தையுடைய கடவுளாகிய ஸ்ரீ வேங்கடாசலபதி. இலங்கு தாளிணை — விளங்குகின்ற திருவடிகள் இரண்டையும். விலங்கும் —



நாற்கால் பிராணிகளும். வீடுறுகின்றன— மோட்சம் அடைகின்றன என்றால். மெய்ந்நெறிப் புலன் கொள்வார்கட்கு — சத்திய வழியில் நடக்கும் தத்துவஞானிகளுக்கு. அனையது - அந்த முக்தியானது.]

ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் தம் திருவடிகளை வேங்கடமலையில் பதிய வைத்திருக்கிறாராம். மலை குனிய, ஞான மலைகளும் பணிய, நிற்கும் பெருமாளல்லவா?

இந்த மகிமையால் வேங்கடமலையிலுள்ள மிருகங்கள் முதலியனவும் மோட்சத்தை அடையும் என்றால், இம்மலையில் வசிக்கும் ஞான மலைகளுக்கு முத்தி பொய்த்துப் போகுமா? இவ்வாறு தம்மைத்தாமே வினவிக்கொண்டு வானரவீரர்கள் தங்கள் மகாராஜாவின் அபிப்பிராயம் சரிதான் என்று திருப்தியடைகிறார்கள்.

இப்படி எண்ணமிட்டவர்களாய் அந்த ஞானவீரர்களை இந்த வானரவீரர்கள் தணிந்து நெருங்கி அவர்கள் அடிகளில் முடிபட வணங்குகிறார்கள் :

ஆய குன்றினை
எய்தி, அருந்தவம்
மேய செல்வரை
மேவினர், மெய்ந்நெறி
நாயகன் தனை
நாளும் வணங்கிய
தூய நற்றவர்
பாதங்கள் சூடினர்.

[ஆய — அவ்வாறாகிய. குன்றினை — (இங்கே) திருவேங்கட மலையை. எய்தி— அடைந்து. அருந்தவம் மேய செல்வரை — செய்தற்கு அரிய தவம் பொருந்திய அந்த உண்மைத் திருவாளர்களை. மேவினர் — அடைந்தவர்களாய். மெய்ந்நெறி நாயகன் தனை — சத்திய நெறியின் தலைவனாகிய ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளை. நாளும் வணங்கிய — எந்நாளும் வணங்கப் பெற்ற. தூய நற்றவர் — தூய்மையான சிறந்த தவத்தையுடைய அப்பெரியோர்களின். பாதங்கள் சூடினர் — திருவடிமலர்களைத் தங்கள் முடிகளில் சூட்டிக் கொண்டது போல் வணங்கினர்கள்.]



இத்தகைய பாக்கியவான்களைக் கண்டதும் வானரர்கள் தம்மை யறியாமலே விரைந்து போய்த் தரிசிக்கிறார்கள், வணங்குகிறார்கள் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

'அந்தப் பிறவிப் பகைவர்களை — அங்கேதான் வேறு பகைவர்கள் இல்லையே — திக்கு நோக்கித் தண்டனிட்டு அப்பால் சென்று விடவேண்டும்' என்று சுக்கிரீவன் எச்சரிக்கை செய்திருந்தான். 'நெருங்கிப் போய் விட்டால் மோட்சத்தை அடைந்து விடுவீர்கள்! அதனால் சீதையைத் தேடுவதாகிய ராம கைங்கரியம் தடைப்பட்டுப் போகுமே! ஆகவே, வேங்கட மலையை விட்டு விலகி அப்பால் போய் விடுங்கள்' என்று சுக்கிரீவன் தெளிவாகச் சொல்லியிருந்தான். அந்த ஆணையை மீறியது எப்படி?

வேங்கடேசப் பெருமாளைக்கூட வழிபடவில்லை வானரர்கள்! பெருமாளை வழிபடும் பெரியோரை வழிபட்டபின் சீதையைத் திருப்பதி மலையிலும் தேடுகிறார்களாம். 'ஒரு வேளை சீதை அங்கே இருந்தால்?' என்று இவர்கள் எண்ணியது போலத் தோன்றுகிறது. திருப்பதி மலைக்கும் போய்ச் சீதையைத் தேடத் துணிந்த பின்பு, பகவானை வணங்காவிட்டாலும் கூட, இந்தப் பரம பாகவதர்களை மட்டுமாவது வழிபடாமல் செல்வது எப்படி?

பாகவதர்களைத் தரிசித்து மன அமைதியும் பக்தி விசுவாசமும் புதிய சக்தியும் பெற்று

உத்ஸாகமாய்ப் போய் மேலும் தேடுவோம் என்று எண்ணி யிருக்கலாம். தங்கள் மகாராஜா உத்ஸாகமாய்ப் புராண தோரணையில் மிகைப்படுத்தித் 'திருப்பதி மாகாத்மியம்' பேசி யிருக்கலாமென்று கூடக் கருதி யிருக்கலாம், அனுமன் முதலான அறிஞர்கள்.

திருப்பதிக்குத் தெற்கே

பிறகு தொண்டை நாட்டை அடைகிறார்கள். இங்கே பெரும் புலவர்களைக் காண்கிறார்கள். இப்புலவர்கள் 'ஸம்ஸ்கிருதம் தமிழ்' என்ற மொழிச் சண்டைகளில் வீண்பொழுது போக்காமல் இரு மொழிகளையும் பட்சபாத மில்லாது கற்றுத் தேர்ச்சி பெற்றிருக்கிறார்களாம்.

இப்போது சென்னை தமிழக நகரங்களுக்கெல்லாம் அன்னையெனக் கொலுவிருக்கும் தொண்டை மண்டலத்திலே, புலவர் குழாங்களுடன் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்யும் வீரர்களும், வரையாது கொடுக்கும் வள்ளல்களும் காணப் படுகிறார்களாம்.

'தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' என்று ஔவையார் கண்ட தொண்டை நன்னாட்டை வானர வீரர்களும் கண்டு சோழ வளநாட்டில் பிரவேசிக்கிறார்கள்;

சோழ வளநாடு
சோ(று) உடைத்து

[உடைத்து — உடையது.]

என்று ஔவையார் பாராட்டும் தமிழகப் பகுதியை வானர வீரர்கள் கண்டு களிக்கிறார்கள்.

எங்கே பார்த்தாலும் நெல்லும் கரும்பும், கமுகும் தென்னையும், மாவும் பலாவும் வளம்பட வளர்ந்திருக்கின்றன :

செந்நெ லும் கரும்—
பும் கமு கும்செறிந்(து)
இன்னல் செய்யும்
நெறிஅரி(து) ஏகுவார்.

[செறிந்து — நெருங்கி. இன்னல் செய்யும் — துன்பம் செய்யும். நெறி — வழிகளில். அரிது ஏகுவார் — அருமையாகப் போவார்.]

'காவேரி அலை கொழிக்கக் காசினியெலாம் செழிக்க' என்று புகழத் தக்க காவேரிதீரம் முழுதும் செந்நெலும் கரும்பும் கமுகும், போவதற்கும் வழி கிடையாதபடி, எங்கும் நெருங்கித் துன்பம் செய்கின்றனவாம். இத்தகைய பிரதேசத்தில் எவ்வளவோ கஷ்டப்பட்டு வழி பிடித்துப் போகிறார்களாம் வானர வீரர்கள்.

முற்றிக் கீழே விழுந்து கிடக்கும் தேங்காய்களில் தடுக்கி விழுந்தும், தேன்பெருக்கில் வழுக்கி விழுந்தும் சோழவள நாட்டைக் கடந்து போகிறார்கள். திருமலைக்குப் போனவர்கள் திருவரங்கம் போகாமல்தான் போகிறார்கள். பாவம், அவ்வளவு அவசரம்!

மலை நாடாகிய சேர நன்னாட்டையும் பார்த்துவிட்டு,

இனிய தென்தமிழ்
நாடுசென் றெய்தினர்.

[சென்றெய்தினர் — போய்ச் சேர்ந்தார்கள்.]

தமிழின் முதற் பண்ணையான பாண்டிய நாட்டை அடைந்ததும், இங்கேயாவது சுக்கிரீவாக்ஞையை மீறாமல் அகஸ்திய மலையையும் அவரது தமிழ்ச் சங்கத்தையும் விட்டு விலகித்தான் போகிறார்கள்!

எனினும் தென் தமிழ் நாட்டின் வசீகர சக்தியே சொர்க்க லோகத்தின் வசீகர சக்திக்கும் மேற்பட்டிருப்பதாய்க் காண்கிறார்கள் :

அத்தி ருத்தகு
நாட்டினை அண்டர்நா(டு)
ஒத்தி ருக்குமென்—
றால், உரை ஒக்குமோ?
எத்தி றத்தினும்
ஏழுல கும்புகழ்
முத்தும் முத்தமி—
ழும்தந்து முற்றுமோ?

[அத்திருத்தகு நாட்டினை — அந்தச் செல்வ வளம் விளங்குகின்ற பாண்டிய நாட்டை. அண்டர்நாடு—தேவர்களின் சொர்க்க நாடு. உரை ஒக்குமோ—அந்தச் சொல்லானது பொருளில் பொருத்தமுடையதாக இருக்குமா? எத்திறத்தினும்—எல்லாவகையாலும். முற்றுமோ—பூர்த்தியாகுமோ.]